பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 09 வியாழக்கிழமை (23.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :116

# ஒட்டுப்படைகளின் தாக்குதல் தொடர்ந்தால்

# புலிகள் மீதான யுத்தமாக அது கருதப்படும்

## மதியுரைஞர் பாலசிங்கம் எச்சரிக்கை



லண்டன், மார்ச் 23

**"அரச ஆயுதப் படைகளின் பங்களிப்போடு தமிழ் ஒட்டுப்படைகள் அல்லது துணைப் படைகளினால் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்படும் இராணுவத் தாக்குதல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்ந்தால் அது புலிகள் மீதான ஒரு யுத்தமாகவே கருதப்படும். அந்த நிலைமை வன்முறைக்கும் முழு அளவிலான ஒரு யுத்தத்திற்கும் வழிகோலும்"**

**- இவ்வாறு எச்சரிக்கின்றார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும், புலிகளின் பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.**

நேற்று தமது லண்டன் இல்லத்தில் வைத்து 'உதயன்'இற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அரச படைகளின் உதவியோடு ஒட்டுப்படைகளின் தாக்குதல் தொடர்வது முழு அளவிலான யுத்த நிலைமைக்கு வழிகோலும். அத்துடன் அமைதிப்பேச்சுகள் முன்னேறுவதற்கான முட்டுக்கட்டையும், தடையுமாக அது அமையும். அது சமாதான நடவடிக்கைகள் முற்றாகச் சீர்குலைந்துபோக வழி வகுக்கும்" - என்றார் பாலசிங்கம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரச பகுதிகளுக்குப் போராளிகள் செல்ல 28 கடும் நிபந்தனைகள் இராணுவம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளுக்கு விடுதலைப் புலிகளின் போராளிகள் செல்வதற்கு 28 கடும் நிபந்தனைகளை இராணுவம் விதித்திருக்கின்றது.

அவ்வளவற்றையும் ஏற்று புலிகள் செயற்பட முன்வந்தால்தான் புலிகளின் போராளிகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்க முடியும் என்று இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியற் பணியாற்றச் செல்லும் போராளிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பது தொடர்பாகவே இராணுவத் தரப்பு இத்தகைய நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

இராணுவத்தின் நிபந்தனைகள் அடங்கிய கடிதம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாகப் புலிகளின் தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசியல் வேலைக்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்லும் புலிகளின் போராளிகள் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன செய்யக்கூடாது என்பவையெல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## படைத்தரப்பின் கடும் நிபந்தனைகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்

### நிலைமையைத் தெளிவுபடுத்துகிறார் பாலா

லண்டன், மார்ச் 23

"புலிகளின் அரசியல் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று அரசியற் பணிகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் விதத்தில் கடும் நிபந்தனைகளை படைத்தரப்பு விதிப்பது போர்நிறுத்த உடன் பாட்டை - ஒப்பந்த விதிகளை - நடைமுறைப்படுத்த விடாமல் தடுக் கும் செயற்பாடாகும். உடன்பாட்டு வாசகங்களுக்கு முரணானது இந்த நடவடிக்கை"

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும், பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.

"இந்த நடவடிக்கை சமாதான முயற்சிகளுக்கு பெரும் தீங்கும் இடையூறும் விளை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் மீதான தண்டனைத் தீர்ப்பை அமுல் செய்ய உத்தரவிடக் கோரி வழக்கு

### பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனிய தாக்கல்

கொழும்பு, மார்ச் 23

இலங்கை மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவ வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு 2002ஆம் ஆண்டில் கொழும்பு மேல்நீதிமன்றம் விதித்த 200 வருட சிறைத் தண்டனையை அமுல்படுத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரும், ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தருமான எச்.எம். ஜி.பி. கொட்டகதெனிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல்செய்துள்ளார்.

இந்த வழக்கின் மீதான விசாரணை மே 25 ஆம் திகதி நடைபெறும்.

மத்திய வங்கி குண்டுவெடிப்புச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் முடி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பரு. கடலில் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட படகுடன் ஐவர் கைது!

### விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்லர் எனத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

"விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது எனக் கருதப்படும் பெரிய மீன்பிடிப்படகொன்றை இலங்கை கடற்படையினர் பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து கைப்பற்றியுள்ளனர் எனவும் -

அந்தப்படகில் பயணித்த ஐந்து பேரை கைதுசெய்து மேலதிக விசாரணைக்காக தடுத்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

இது விடயத்தை கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கும் கொண்டுசெல்வர் எனவும், இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது -

பருத்தித்துறைக்கு கிழக்காக கடலில் பெரிய படகொன்று செவ்வாய் இரவு 8.30 மணியளவில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுவதை கடற்படையினர் அவதானித்தனர். பின்னர் அவர்கள் அப்படகை அண்மித்து நோட்டமிட்டபொழுது படகின் தோற்றம் கடற்படையினரின் சந்தேகத்தை வலுப்படுத்தியது. படகின் வெளியில் காணப்பட்ட படகின் பெயரும் வினோதமான முறையில் எழுதப்பட்டிருந்தது! 'பியந்ததுவ' என்று அது இருந்தது.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகாக

(14ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் விபத்து தபாலக ஊழியர் மரணம்!

யாழ்ப்பாணம்,மார்ச்23

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு சமீபமாக நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதாகக் கூறப்படும் விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொ

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேனா வகை துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

கொழும்பு, மார்ச் 23

வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட பேனா வகைத் துப்பாக்கியொன்றை வைத்திருந்த நபரொருவரை ஹொரண பொலீஸார் ஹொரண வவுலிகல பகுதியின் வீடொன்றில் ஒளிந்திருந்தவேளை கடந்த திங்களன்று கைது செய்துள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனையில் காவலரண் மீது சூடு

குடத்தனை,மார்ச்23

குடத்தனை ஆறாங்கட்டைப் பகுதியில் அமைந்துள்ள காவலரண்மீது நேற்று நண்பகல் 12 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய கல்விச்சுடரில்

**தரம் - 5 புலமைப்பரிசில் வினாத்தாள், தரம் - 5 புலமைப்பரிசில் விடைக்குறிப்புகள், உயர்தர மாணவர்களின் பொருளியல் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி.**

## வவுனியாவில் நேற்றிரவு இருவர் சுட்டுக்கொலை!

வவுனியா,மார்ச்23

வவுனியா வைரவப்புளியங்குளம் ஸ்ரேசன் வீதியில் நேற்றிரவு 8.45 மணியளவில் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையே தனியார் பஸ்சேவை நடத்திவரும் கபிலன் ரவல்ஸ் உரிமையாளர் எம்.குணரத்தினம் (வயது 50) என்பவரும் சாரதியான யூட் (வயது 30) என்பவருமே சுட்டுக்கொல்லப் பட்டவர்களாவர்.

உயிரிழந்த குணரத்தினம் தமது வீட்டில் தொலைபேசியில் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்த சமயம், அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இருவரையும் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (3-164)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருட மாணவன் ஜெ.ஜெயராஜின் தயாரிப்பில் உருவான ஆழிப்பேரலை அனர்த்தத்தின் அவலங்களைச் சித்தரிக்கும் 'மானிடம் வெல்லுமம்மா...' இசைத்தட்டு வெளியீட்டுவிழா நேற்று புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும், முதன்மைப் பிரதியை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டுவைக்க பௌதிகவியல் ஆசிரியர் இ.குமரன் பெற்றுக்கொள்வதையும், வாழ்த்துரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பிரியன்)

# தேசியக்கொடி இறக்க முயன்றதை கண்டித்து மாணவர் அமையம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குள் புகுந்த படையினர் அன்னை பூபதி நினைவாக அங்கு ஏற்பட்ட தேசியக் கொடியை இறக்க முயற்சித்ததை உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு மாணவர்களை ஆயுதமுனையில் அடக்கிவிட யாழ். குடாநாட்டு ஆக்கிரமிப்பு படைகளின் தளபதி சந்திரசிறி கடும் பிரயத்தனம் மேற்கொண்டுவருகின்றார். மாணவர்கள் எழுச்சி நிகழ்வுகளில் பங்குபற்றக் கூடாதென்றும், பொது இடங்களில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றக் கூடாதெனவும் புதிய சட்டங்களை வகுத்துவருகின்றார்.

இவருக்கு இங்குள்ள ஆக்கிரமிப்புப் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மட்டுமே உள்ளது. இருந்தும் மக்கள், மாணவர்கள் மீதும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தவேண்டும் என்ற ஒரு நப்பாசையும் இந்த இராணுவத் தளபதிக்கு இருந்துகொண்டே வருகின்றது.

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினுள் ஆயுதங்களுடன் நேற்று அத்துமீறி நுழைந்த நூற்றுக்கணக்கான படையினர் அங்கு தியாகதீபம் அன்னை பூபதி அவர்களின் நினைவு நிகழ்விற்கு ஏற்றப்பட்டிருந்த தமிழீழத் தேசியக் கொடியினை இறக்க முயற்சித்தனர். மாணவர்களின் கடும் எதிர்ப்பினால் முயற்சி பயனளிக்காது திரும்பிச் சென்றுவிட்டனர்.

சமாதான காலத்தில் ஆயுத முனையில் மாணவர்களை அடக்க நினைக்கும் தளபதி துணிவு இருந்தால் யுத்தத்தைப் பிரகடனப் படுத்திவிட்டு யுத்தத்திற்கு வரட்டும். அப்போது குடாநாட்டு மாணவர்கள் யார் என்பதைப் புரியவைப்போம் என்பதைத் தெரியப் படுத்துவதோடு, சகல நிகழ்வுகளுக்கும் சகல கல்விசார் நிறுவனங்களிலும் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றியே தீருவோம். தடுக்க நினைத்தால் சந்திரசிறி அவர்களுக்கு மாணவர்கள் நாம் யார் என்பதைப் புரியவைப்போம் என்பதை யாழ். குடாநாட்டு மாணவர்கள் சார்பாகக் கூறிவைக்கின்றோம் - என்றுள்ளது. (3)

## சிறுவர் அரங்கு

செயல்திறன் அரங்க இயக்கத்தினரால் நடத்தப்படும் 'வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இரண்டாவது நாளாக இன்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடத்தப்படுகின்றது.

நிகழ்வில் தொடக்கவுரையை கந்தசாமி ஐயர் விக்னேஸ்வரியும், சிறுவர் நாடகப் பாடல் நிகழ்வை கோண்டாவில் இந்து ம.வி. ஆசிரியர் நா.சிவசிதம்பரமும் நிகழ்த்துவர். அடுத்து சிறுவர் நாடகப் பாடல் காட்சி இடம்பெறும்.

இடைவேளையைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த.ரதிதரனின் 'சிறுவர் நாடக எழுத்துருக்கட்டமைப்பு' அரங்கும், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'பந்தயக் குதிரையார்' சிறுவர் நாடக அரங்கும் இடம்பெறும்.

இதனையடுத்து சிறுவர் நாடகப் பாடல் காட்சியும், செயல்திறன் அரங்க இயக்க இயக்குநர் தே.தேவானந்தின் சிறுவர் நாடகமும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'கண்டறியாத கதை" நாடக ஆற்றுகையும் இடம்பெறும்.

காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு நிறைவடையும். (3-203)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிலையம் திறப்பு

இலங்கையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியாவதையும் யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியாவதையும் முன்னிட்டு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் முதலாவது சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிலையம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் கொழும்பு தலைமையகத்தைச் சேர்ந்த தளபதி டாக்டர் ஜே.ஜீ.ஜயதிலக்க, ஜேர்மனைச் சேர்ந்த ஸ்ரெப்பன் ரைற், பீற்றீமாஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (203)

## சிறு தோழர்கள் ஒன்றுகூடல்

சிறுதோழர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சிறுதோழர்கள் அமைப்பு இயங்கும் பாடசாலைகள் அவர்களை இந்த ஒன்றுகூடலுக்கு அனுப்பிவைக்கும்படி யாழ். மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (3)

# விரைவில் அரசியல் தீர்வு காணாவிடில் யுத்தநிறுத்தம் சாத்தியம் இல்லை

## கண்காணிப்புக் குழுவினரிடம் டக்ளஸ் தெரிவிப்பு

விரைவானதும் கௌரவமானதுமான இறுதி அரசியல் தீர்வு ஒன்று காணப்படாத நிலையில் யுத்தநிறுத்தம் சாத்தியமில்லை.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

புலிகள் இதய சுத்தியுடனும், நேர்மையான முறையிலும் அரசியல் பணியாற்றுவதற்கு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருகை தந்து, மக்களுக்கு பயன்தரும் வகையில் தங்களது செயற்பாடுகளை மேற்கொள்வார்களாயின் அது வரவேற்கத்தக்கது. ஆனால், அவர்கள் அவ்வாறு செயற்படுவார்களா என்பது, புலிகளின் கடந்தகால மற்றும் நிகழ்கால செயற்பாடுகளைக் கொண்டு பார்க்கும் போது சந்தேகமாகவே இருக்கின்றது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நிலையில், பல்வேறு தரப்புகளைச் சார்ந்த மக்களை அன்றாடம் நேரில் சந்தித்து வருவதாகவும், மேலும் பலர் தொலைபேசி மூலமும் கடிதங்கள் வாயிலாகவும் தன்னை தொடர்புகொண்டு வருவதாகவும் ஆதாரங்களுடன் எடுத்துக்கூறிய அமைச்சர் அவர்கள், இவ்வாறான தொடர்புகளின்போது புலிகள் மீண்டும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதில் மக்கள் மத்தியில் அச்சம் காணப்படுவது தெட்டத்தெளிவாகத் தெரியவருகின்றது எனவும் தெரிவித்தார் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3)

## அதிபர்களுடனான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்23

தீவக வலயப் பாடசாலை அதிபர்களுடனான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர்கள் கலந்துகொள்ளவேண்டும் என வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (3)

# இருபத்தொரு வருடங்களின் பின்னர் இந்தியாவில் டெஸ்ட் வெற்றியைப் பெற்றது இங்கிலாந்து அணி

மும்பை, மார்ச் 23

மும்பையில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்டில் 212 ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்திய இங்கிலாந்து 21 ஆண்டுகளிற்குப் பின் இந்தியாவில் முதல் டெஸ்ட் வெற்றியைப் பெற்றது. இந்த வெற்றி மூலம் டெஸ்ட் தொடரை 1:1 என்ற ரீதியில் சமன் செய்துள்ளது இங்கிலாந்து.

மதிய போசன இடைவேளையின் போது 75 ஓட்டங்களிற்கு மூன்று விக்கெட்டுகள் என்ற நிலையில் இருந்தது இந்தியா. ஆனால், அதன் பின்னர் 16 ஓவர்களில் மேலதிக 7 விக்கெட்டுக்களையும் 25 ஓட்டங்களுக்குள் இழந்து படுதோல்வியை அடைந்தது இந்தியா.

உடால் மற்றும் பிளின்ரொப் ஆகியோரின் அற்புதமான பந்து வீச்சில் அடுக்கி வைக்கப்பட்ட சீட்டுக்கட்டுக்கள் போல் சரிந்த இந்தியா 100 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஷோன் உடால் 14 ஓட்டங்களிற்கு 4 விக்கெட்டுக்களையும் பிளின்ரொப் 14 ஓட்டங்களிற்கு மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றி நாயகர்களாக வலம்வந்தனர்.

இந்திய அணி சார்பில் சச்சின் டெண்டுல்கர் அதிகபட்சமாக 34 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே சச்சின் இந்த டெஸ்ட் தொடரில் பெறும் அதிகபட்ச ஓட்டமாகவும் விளங்குகின்றது. ஷோன் உடாலின் பந்தில் "சோட் லெக்" திசையில் நின்ற இயன் பெல்லிடம் பிடிகொடுத்து வெளியேறினார் சச்சின். இந்தியாவின் தூணாக வர்ணிக்கப்படும் ராகுல் டிராவிட்டை பிளின்ரொப் வெளியேற்றினார்.

நேற்றுக்காலை ஆட்டத்தில் இங்கிலாந்து அணியினால் இரண்டு விக்கெட்டுக்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. ராகுல் டிராவிட்டும் சச்சின் டெண்டுல்கரும் மதிய போசன இடைவேளை வரை விக்கெட் விழாமல் நிதானமாக ஆட்டத்தை தொடர்ந்தனர்.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் "நைற்வோச்மன்" கும்ளேயை எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றினார் மத்தியூ ஹோகாட். தொடர்ந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வசீம் ஜாபர் பிளின்ரொப்பின் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். அதன் பின்னர் ஆடுகளம் புகுந்த சச்சின் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் கொடுத்த பிடியை மூன்றாவது "சிலிப்" திசையில் நின்ற பிளின்ரொப் தவறவிட்டார்.

மதிய போசன இடைவேளைக்குப் பின் வீசப்பட்ட முதலாவது ஓவரின் மூன்றாவது பந்தில் டிராவிட் வெளியேறஇந்திய அணி ஆட்டம் காணத் தொடங்கியது. தொடர்ந்து அடுத்த ஓவரில் டெண்டுல்கர் வெளியேறினார்.

முதுகுப் பகுதியில் காயம் காரணமாக ஆரம்ப வீரராக இறக்கப்படாத வீரேந்திர சேவாக் 7ஆவது ஆட்டக்காரராக இறங்கி ஓட்டமெதுவும் பெறாத நிலையில் அண்டர்சனின் பந்தில் வெளியேறினார்.

விக்கெட் காப்பாளர் மகேந்திரா டோனி கொடுத்த இலகுவான பிடியைத் தவறவிட்டார் பனிஷர். எனினும் தொடர்ந்து அடுத்த பந்தில் மீண்டும் அவரிடமே பிடி கொடுக்க அதை லாவகமாக ஏந்தி டோனியை ஆட்டமிழக்கச் செய்தார் பனிஷர்.

இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இங்கிலாந்து அணியின் தலைவர் பிளின்ரொப் தெரிவு செய்யப்பட்டார்.

# மூன்றாவது ஆட்டத்திலும் வென்று தொடரைத் தன்வசமாக்கியது பாக்.

கொழும்பு, மார்ச் 23

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரை 2:0 என்ற ரீதியில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியது.

சயீட் அப்ரிடி சிறப்பாகப் பந்து வீசி 47 ஓட்டங்களிற்கு மூன்று விக்கெட்டுகளை கைப்பற்றியும் மொகமட் யூசுப் 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தும் அணியின் வெற்றிக்கு வழிகோலினர்.

கொழும்பு எஸ்.எஸ்.சி விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஒருகட்டத்தில் 22 ஓவர்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்று ஸ்திரமான நிலையிலிருந்தது. எனினும் அப்ரிடிதிறமையாக பந்து வீசி இலங்கையணியைத் திணறடித்தார். முடிவில் 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இலங்கையணியின் ஆரம்பவீரராகக் களமிறக்கப்பட்ட சமர கப்புக்கெதர ஆரம்பத்தில் அதிரடியாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். அவர் அரைச்சதத்தைக் பூர்த்தி செய்தவுடன் ரன் அவுட் முறையில் வெளியேறினார். டில்சான் 44 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பாக். களத்தடுப்பாளர் யூனிஸ்கான் சிறப்பாக களத்தடுப்பில் ஈடுபட்டு இரண்டு ரன்அவுட்களைச் செய்தார்.

வெற்றியிலக்கை துரத்த ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு அதன் ஆரம்பவீரர்களாகக் களமிறங்கிய சொய்ப் மாலிக் மற்றும் இம்ரான் பர்காத் ஆகியோர் நல்ல அடித்தளமிட்டுக் கொடுத்தனர். இருவரும் இணைந்து ஆரம்ப விக்கெட்டிற்க்கு 61 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இருவரும் தலா 46 ஓட்டங்கள்ளப் பெற்று ஆட்டமிழந்தனர். மாலிக் 38 பந்துகளில் இந்த ஓட்ட எண்ணிக்கையை விளாசினார்.

முரளிதரன் சிறப்பாக பந்து வீசி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினாலும் அவரால் இலங்கை அணியினை வெற்றிக்கு அழைத்தீச் செல்ல முடியவில்லை. ஆட்டத்தின் கடைசியில் ரஸாக் 46 ஆவது ஓவரில் விளாசிய சிக்ஸரின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது பாகிஸ்தான்.

பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற முதல் இரு ஆட்டங்களிலும் ஓட்டங்கள் பெரிதாக குவிக்கப்படாத போதும் இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் ஓரளவு திறமையாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தன. இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவுசெய்யப்பட்டார். அதே வேளை தொடரின் நாயகனாக அப்துல் ரசாக் தெரிவு செய்யப்பட்டார்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நம்பிக்கையைத் தகர்க்கும் அரசுத் தரப்பின் எத்தனங்கள்

வடக்கு - கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமது அரசியல் பணிகளை ஆரம்பிப்பதற்காக அங்கு நேற்றுத் தமது போராளிகளை அனுப்பி வைப்பதற்கு உத்தேசித்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை அத்திட்டத்தை நேற்றுமுன்தினம் மாலையில் கடைசி நேரத்தில் ரத்துச் செய்து விட்டது.

அரசியல் பணியாற்றச் செல்லும் போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாக அரச பாதுகாப்புத் துறையின் தரப்பில் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டமையை அடுத்தே - அதனை ஏற்க முடியாது என்ற காரணத்தால் - போராளிகளை அரசியல் பணிக்கு அனுப்பும் திட்டத்தை புலிகளின் தலைமை இப்போதைக்கு நிறுத்தி வைத்துவிட்டதாக அறியவருகின்றது.

ஜெனீவா அமைதிப் பேச்சுகளினால் கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கு விழுந்த ஓர் அடியாகவே இந்த நிலைமையைக் கருதவேண்டும்.

அமைதி முயற்சிகளின் - சமாதான நடவடிக்கைகளின் - மூலம் ஓர் இணக்கத்தீர்வு காணப்படவேண்டுமானால்-

அந்த இணக்கத்தீர்வின் அடிப்படையின் பெறுபேறாக பல முக்கிய அம்சங்கள் நடைமுறைக்கு வர வேண்டும்.

நிலைத்து நீடிக்கின்ற - நிரந்தரமான - ஒரு தீர்வு எட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது தற்போது தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்ட சக்தியாக இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பு, அதிலிருந்து மீண்டு, ஓர் அரசியல் இயக்கமாக மாறவேண்டியதும்- பரிணாமம் பெறவேண்டியதும் - ஓர் அம்சமாகும்.

சுருங்கக் கூறுவதாயின் -

விடுதலைப் புலிகள் இயக்கம், அரசியல் இயக்கமாக - மக்கள் மத்தியில் அரசியல் பணியாற்றும் அமைப்பாக - மாற்றம் பெறுவதும் அமைதித் தீர்வு முயற்சியின் இறுதிக்கட்டத்தில் இடம்பெறவேண்டிய விடயமாக இருக்கும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதம் தாங்காமல் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அரசியல் பணியில் ஈடுபடுவது,மேற்படி இறுதிக்கட்ட செயற்பாட்டுக்கான அத்திவாரமாக இருக்கும் என்பதை அரசுத்தரப்புப் புரியாமல் இருப்பதும் -

தேவையற்ற - பொருத்தமற்ற - நிபந்தனைகளைப் போடுவதன்மூலம் அந்த அத்திபாரத்தை அமைக்க விடாமல் படைத்தரப்பு தடுப்பதும் -

யுத்தநிறுத்த உடன்பாட்டின் ஓர் அங்கமாகவும், ஜெனீவாப் பேச்சின் பெறுபேறாகவும்உள்ள - அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் போராளிகள் அரசியல் பணியாற்றும் உரிமையை - வீண் நிபந்தனைகளை விதித்து படைத்தரப்பு வழங்க மறுப்பதும்-

அமைதி முயற்சிகளின் முன் நகர்வுகளுக்கு முட்டுக்கட்டை போடும் விடயமேயன்றி வேறில்லை.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியாற்றுவதற்காகப் புலிகளின் போராளிகள் அங்கு செல்வதற்கு பல்வேறு நிபந்தனைகளை விதிக்கும் கடிதம் ஒன்றை, கண்காணிப்புக்குழு ஊடாக இராணுவம் புலிகளுக்கு வழங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

விடுதலைப்புலிகள், தமது கொடிகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் எங்கேயேனும் ஏற்றக்கூடாது, வெகுஜன எழுச்சி என்ற பெயரில் மக்களைத் திரட்டக்கூடாது, மாணவர்களைத் தமது அரசியல் நிகழ்வுகளில் பங்குபற்றச் செய்யக்கூடாது என்பன போன்ற பல நிபந்தனைகள் அந்த நீண்ட பட்டோலையில் உள்ளன எனக் கூறப்படுகின்றது.

தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தின் உச்சத்தில் நிற்கின்றது தமிழினம். அந்த உயர் நிலைக்குத் தமிழினத்தை இட்டுச் சென்றமைக்கு, உரிமைக்கான போராட்டத்தில் தமிழினத்துக்கு ஏற்பட்ட விழிப்புணர்வும் எழுச்சியுமே காரணமாகும். வெகுஜன எழுச்சியின் உயர்வில் இன்று நிற்கும் தமிழினத்துக்கு இடையே அரசியல் பணிபுரியச் செல்லும் போராளிகள் வெகுஜன எழுச்சிக்கு மக்களைத் தூண்டக்கூடாது என்று கட்டுப்படுத்தும் வகையில் நிபந்தனை போடுவது அபத்தமின்றி வேறில்லை.

போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று அரசியல் பணியாற்றுவதும், அதற்கு அனுமதிப்பதும் யுத்தநிறுத்த உடன்பாட்டில் தெட்டத்தெளிவாக இணக்கம் காணப்பட்ட அம்சங்களாகும். அதைச் செயற்படுத்த விடாமல் புதிய, புதிய கட்டுப்பாடுகள், நிபந்தனைகளை விதிப்பது உடன்பாட்டின் அமுலாக்கத்தை மறுக்கும் மற்றொரு மீறல் செயலாகவே கருதப்படும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு போராளிகள் வருவதற்கு தடை விதிக்கும் வகையில் செயற்படுவதன் மூலம் புலிகளுடன் பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை, இணக்கம் போன்றவை ஏற்படுவதற்கும் ஆப்பு வைக்கிறது அரசுத்தரப்பு.

புலிகளுடன் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் இத்தகைய வாய்ப்புகளைத் தகர்த்துவிட்டு ஜெனீவாவிலோ அல்லது வேறு எங்கேயோ போய் இருந்துகொண்டு புலிகளுடன் பேசி, புரிந்துணர்வையும் இணக்கத்தீர்வையும் காணப்போவதாக அரசுத்தரப்பு கூறுவது வெறும் அளப்பு அன்றி- கனவு அன்றி- வேறில்லை.

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டாலும் தபால் மூல வாக்களிப்பு நிராகரிக்கப்படாது!

## யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச்23

வடக்கு- கிழக்கில் குறிப்பாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் தினம் ஒத்திவைக்கப்பட்டுள்ளபோதிலும் தபால்மூல வாக்களிப்பில் அளிக்கப்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்படமாட்டாது. இத் தகவலை யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கு- கிழக்கில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எனினும் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்ற தபால்மூல வாக்களிப்புக்கள் நிராகரிக்கப்படமாட்டா. நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தற்போதைய தபால்மூல வாக்களிப்பில் அளிக்கப்பட்ட வாக்குகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

எனவே, தபால் மூல வாக்களிப்பில் யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை உரியவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு ஒப்படைக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிடைக்காதவை நிராகரிக்கப்படும் - என்றார் அவர்.

வாக்களிக்கப்படாத வாக்குச் சீட்டுக்களை எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து 2 கிழமைகளுக்கு முன்னர் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி தேர்தல் ஆணையாளரால் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு விடுத்த பணிப்புரைக்கமைய 2002 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்காக நடத்தப்பட்ட தபால்மூல வாக்களிப்பில் வாக்களிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இம்மாத ஆரம்பத்தில் இந்த வாக்குச் சீட்டுக்கள் காக்கைதீவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயிட்டு அழிக்கப்பட்டன என்று அவர் மேலும் கூறினார்.

(த-202-203)

# சமூகத்தைப் புரிந்துகொண்ட ஒருவரே துணைவேந்தராக நியமிக்கப்படவேண்டும்

## கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழப்பாணம்,மார்ச் 23

எமது சமூகத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு பல்கலைக்கழகத்தைச் சரியாக வழிநடத்தக்கூடிய பொருத்தமான துணைவேந்தர் ஒருவர் உடனடியாக நியமிக்க வேண்டும் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக கலைப்பீட ஒன்றியம் வெளியிட்டிருக்கின்ற அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது சமூகத்தினைச் சரியாகப் புரிந்து கொண்டு எமது பல்கலைக்கழகத்தினை சரியான வகையில் வழிநடத்தக் கூடிய ஒரு துணைவேந்தரை உடனடியாக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது எமது பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராக கடமையாற்றிய பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்களுடைய பதவிக் காலம் முடிவடைந்துள்ள நிலையில் அவர் மீண்டும் ஒரு வாரம் பதில் துணைவேந்தராகக் கடமையாற்றி அப்பதவிக்காலமும் நிறைவடைந்துள்ளது.

தற்போது துணைவேந்தர் இல்லாத நிலையில் எமது பல்கலைக்கழகம் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே ஸ்ரீலங்கா ஜனாதிபதியினால் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் இரட்ணஜீவன் ஹூல் அவர்களை எமது மக்களும் மாணவர்களும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதை நன்றாகத் தெரிந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எமது பல்கலைக்கழகத்திலே குழப்பமான சூழ்நிலையினை ஏற்படுத்தி எமது மாணவர்களது கல்வி நடவடிக்கைகளைக் குழப்ப வேண்டும் என்ற கபட நோக்கத்திற்காகவே இப்பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்காது இழுத்தடித்துச் செல்கின்றார்.

எனவே; ஜனாதிபதியின் இந்த குள்ளத்தனமான நிலைப்பாட்டினை நாம் நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டுதான் கேட்கின்றோம். எமக்குப் பொருத்தமான ஒரு துணைவேந்தரை உடனடியாக நியமித்து எமது கல்விச் செயற்பாட்டினை நாம் குழப்பமில்லாது மேற்கொள்வதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

### உதயவாக்கு

*தோல்வி வந்தால் அது உனக்குப் பிரியமானதாகக் காட்டிக்கொள்! வெற்றி அடைந்தால் அது மிகவும் பழக்கப்பட்டது போல் காட்டிக்கொள்! இதுதான் வாழ்க்கையின் இரகசியம்!*

*- ஓர் அறிஞர்*

### நாளை

பங்குனி 10
வெள்ளிக்கிழமை
24.03.2006
திதி : தசமி
பின்னிரவு: 04.07
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 3.40
சுபநேரம் : 06.16 - 07.46
ராகுகாலம் :11.46 - 12.16
(யாவும் பழைய நேரப்படி)

# இதழியல் டிப்ளோமா பயிற்சியின் அங்குரார்ப்பண விழா நேற்று

யாழ்ப்பாணம்,மார்ச் 23

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் அங்குரார்ப்பண வைபவம் நேற்றுக்காலை நடைபெற்றது.

நகரில் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள், பயிற்சி நிலையத்தின் (எம்.ஆர்.ரி.சி.) விரிவுரை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் தலைமையில் பயிற்சிநெறி ஆரம்ப வைபவம் இடம்பெற்றது.


ஊடக வளங்கள், பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நல்லை ஆதீனத்தின் குருமுதல்வர், யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகைகளின் சார்பில் அவற்றின் பிரதிநிதிகள் வாழ்த்துரைகளை வழங்கினர்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறூநெற் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

இதழியல் டிப்ளோமா பயிற்சிக்காக 30 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களது பயிற்சிக்கான இணைப்பாளராக பேராசிரியர் வி.பி.சிவநாதன் பணிபுரிவார். (ஐ-7-111)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Coke, Fanta, Portello, Sprite (1500ml, 300ml, 175ml) என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம், தொடர்பு: 153, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (சமுர்த்தி வங்கிக்கு அருகில்) T.P.:0777 589608. (48425)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் முத் துத்தம்பி வித்தியாலயத்துக்கு சமீபமாக 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் முழுமையாகவும் விற்பனை செய்யப்படும். தொடர்பு: 0777286072 (சி/48448)

## வீடு விற்பனைக்கு

உடுவிலில், 13 பரப்புக் காணியுடன் வீடு விற்பன்னைக்குண்டு. தொடர்பு: S.கணேஸ்குமார் மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். T.P.No: 07776063164. (48434)

## நாய்கள் விற்பனைக்கு

எம்மிடம் வீட்டுக் காவலுக்குரிய நல் லின நாய்க்குட்டிகள் மற்றும் அழகிற்காக வளர்க்கப்படும் நாய்க்குட்டிகளும் (தடுப்பூசி போட்டுப் பூச்சி நீக்கியவை) குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 'பூம்பொழில்'' நுணாவில், பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. T.P.:077 6170686. (48410)

## கொள்வனவு, விற்பனவு

கல்பேட் கொள்வனவு செய்யப்படும். கோழி எரு விற்பனைக்குண்டு. வினஸ்பாம், திருநெல் வேலி சந்தி, நல்லூர் பிரதேச செயலகம் முன் பாக T.P.:021 4590484. (48417)

## வாடகைக்கு

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் இருந்து 50m முன்பாக உள்ள ஜன சக்தி காப்புறுதி நிறுவனம் இயங்கும் கட்டடத் தொகுதியில் உள்ள இல.1 கடை (32 அடி நீளம் 11அடி அகலம்) முற்பணத்துடன்/ முற்பணம் இல்லாமல் வாடகைக்குண்டு. தொடர்பு:- T.P.: 077 3039422. (48131)

நல்லூர், ஆனைப்பந்தியில் சகல வசதி களும் கொண்ட A/C, non A/C. அறைகள். நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு. (48428)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் உடன டியாக வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் 75000 ரூபாவும் வாடகை 4000 ரூபா -5000 ரூபா வரை கொடுக்கப்படும். தொடர்பு: T.P.:0717878787, 0777398398. (48421)

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளியில் சகல வசதியுடைய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:R.P.ஜெயதாஸ், 17/2 A, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குளி,T.P.:0212223360 (48427)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா, புறொயிலர் குஞ்சுகள் 25-03-2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி. தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை 1ஆம், கட்டை பருத்தித்துறை, றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், மதுரா ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0212222867, 021 2223529(48437)

## மணமக்கள் தேவை

1979ஆம் ஆண்டு பிறந்த, திருவாதிரை நட்சத்திர மணமகளிற்கு அரச உத்தியோகத்தர் மணமகனும் 1975ஆம் ஆண்டு பிறந்த, பூர நட்சத்திர, எழுதுவினைஞர் மணமகள் மற்றும் 1975, திருவோணம் 9இல் செவ்வாய் உடைய சுயதொழில்புரியும் மணமகன் ஆகி யோரிற்கு பொருத்தமான மணமக்கள் தேவை. தொடர்பிற்கு: விதூஸ், 44,புங்கங்குளம், கொழும்புத்துறை. T.P.:0776146221 (48391)

## மணமகள் தேவை

இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர், அனுஷம், கிரகபாவம் 14, செவ்வாய் இல்லாத மணமகனுக்கு ஆசி ரியர், அரசாங்க அலுவலர், வங்கி மற்றும் ஏதேனும் அரச துறையைச் சேர்ந்த மண மகள் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களு டன் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர் பிற்கு: விளம்பர இல.2837, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி/48486)

## தவறிவிட்டது

கைதடி மத்தி, கைதடியைச் சேர்ந்த தம் பிப்பிள்ளை புஸ்பராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (501041041 V), விசேட அடையாள அட்டை, வாகனஅனுமதிப்பத் திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று 21-03-2006 செவ்வாய்க்கிழமை K.K.S. றோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'வேணிகளஞ்சியம்' K.K.S.றோட், யாழ்ப் பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (48414)

## உடன் வேலைவாய்ப்பு

*கொழும்பிலுள்ள பிரபல கம்பனிக்கு யாழ்ப்பாண்த்தில் விற்பனைப் பிரதிநிதி யாக (Sales rep) கடமை புரிவதற்கு உத்தியோகத்தர் இருவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத் தக்கது. உடன் தொடர்புகளுக்கு: 0773268971, 0773175821.*

## அ.அட்டை இல்லாதோரும் வாக்களிப்பதற்கு ஒழுங்கு

கொழும்பு, மார்ச் 23

தேசிய அடையாள அட்டை உட்பட அடை யாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இல்லாத வாக்காளர்களுக்கு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்க முடியும். அதற் கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர் களை வாக்களிக்க அனுமதிப்பதென்று நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத வர்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை குறித்து இந்தக் கூட்டத் தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. உரிய அடையாள ஆவணம் இல்லாதோர் வாக் களிக்க முடியாதென்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு மாறான தீர்மானங் களைத் தம்மால் எடுக்க முடியாதென்று தேர் தல் ஆணையாளர் இந்தக் கூட்டத்தில் திட்ட வட்டமாகத் தெரிவித்தார்

அதேசமயம் தேசிய அடையாள அட்டை களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் மூன்று மாத காலத்திற்குள் அடையாள அட்டைகளை வழங்க முடியுமென்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் இந்தக் கூட்டத்தின் போது தெரிவித்து விட்டார் எனினும். தேசிய அடையாள அட்டை இல்லாதவர் களின் பெருவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்து எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அவர்களும் வாக் களிக்க ஒழுங்கு செய் யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (க)

## தபால்பெட்டி மீண்டும் அமைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்23

நவாலி அரசடி சந்நிதியில் புதிய தபால் பெட்டி மீண் டும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால இரா ணுவ நடவடிக்கை யினால் சேதமாக் கப்பட்ட தபால் பெட்டி 14 வருடங் களுக்கு பின்னர் மீண்டும் மீள் புனர மைப்புச் செய்யப் பட்டு பயன்பாட் டிற்கு விடப்பட்டுள் ளது. (த185)


# அறிவித்தல்

வேலணை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் (வரையறுத்தது)

## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்

மேற்படி சங்கத்தின் துணை விதி பிரிவு 20:2 இன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைவாக சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் ஒழுங்கு விதி 09 இற்கு அமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை கிளைப்பொதுச்சபைக் கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிப்பதற்கு தகுதி யுடையவர்களான உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டம் 2006-03-25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

கூட்டம் நடைபெறும் இடம்பற்றிய விவரங்கள் வருமாறு:

| கிளையின் பெயர் | கிளை இல | கூட்டம் நடைபெறும் இடம் | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் |
|---|---|---|---|
| 01. புங்குடுதீவு மேற்கு | 83 | சிவலம்பிட்டி ச.ச.நி | திரு.இ.விஜயமோகனராசா |
| 02. புங்குடுதீவு கிழக்கு | 85 | பாரதி ச.ச.நி | திரு.அ.தயாளன் |
| 03. வேலணை கிழக்கு | 86 | கலட்டி, சிந்தாத்துரை மாதா தேவாலயம் | திரு.பொ.மகேஸ்வரன் |
| 04. வேலணை வடக்கு | 87 | சுடரொளி ச.ச.நி | திரு. M.S.சண்முகநாதன் |
| 05. வேலணை மேற்கு | 88 | திருவள்ளுவர் ச.ச.நி | திரு.சி.குணாளன் |
| 06. வேலணை தெற்கு | 89 | சர்வோதயம்- வேலணை | திரு.பொ.மோகன் |
| 07. அல்லைப்பிட்டி | 90 | சென் பிலிப்பிஸ் கடல் ஒன்றியக் கூட்டுறவு சங்க மண்டபம் | திரு.க.கமலநாதன் |
| 08. நயினாதீவு | 92 | ஏ.பி.சிறிஅம்பிகா ச.ச.நி - நயினாதீவு | திரு.வே.பிரதீஸ்குமார் |

**சி.ஜயாத்துரை**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
பனை தென்னை வளம், யாழ்ப்பாணம்.

(சி/48483)(26.14.45)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலையமூடாக தமிழ்மொழி மூலம் நடத்தும் இரண்டு ஆண்டுகால மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி 12-06-2006 அன்று தொடங்கி இரண்டு கல்வியாண்டுகள் நடைபெறும்.

இக்கற்கைநெறிக்கு தகுதிவாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய எவரும் விண்ணப்பிக்கலாம். தெரிவு உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்காணல் மூலமும் திறமை அடிப்படையிலும் அமையும்.

**கட்டண விவரம்:**
பதிவுக் கட்டணம் ரூபா 1,000/-
கற்கைநெறிக் கட்டணம் ரூபா 30,000-
மீளப்பெறக்கூடிய வைப்பு ரூபா 1,000/-

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் பதிவு மேற்கொள்ளும் பொழுது இரு பத்தியிரண்டாயிரம் ரூபாவும், இரண்டாம் ஆண்டு ஆரம் பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாக செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக பரீட்சை களும் அனுமதிகளுக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 50/- கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 22-04-2006 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

**பதிவாளர்.** (சி/48490)(26.14.45)



உ
சிவமயம்

# விவாக சுப முகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ மங்கலகரமான பங்குனித் திங்கள் பத்தாம் நாள் (24.03.2006) வெள்ளிக்கிழமை உத்தராட நட்சத்திரமும் தசமித்திதியும் சித்தயோகமும் கூடிய காலை 7.34 மணி முதல் 9.12 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

*யாழ்.நல்லூர் சட்டநாதர் சிவன் தேவஸ்தான பரம்பரையினரான பிரம்மஸ்ரீ காசியப சி.குமாரசாமிக் குருக்கள் தம்பதியரின் பௌத்திரனும் பிரம்மஸ்ரீ.கு.சபாரெத்தின குமாரக் குருக்கள் [கமல பூசண குருக்கள்] லலிதாம்பா தம்பதியரின் ஏகபுத்திரனாகிய*
சிரஞ்சீவி **சிவபாலகுமார சர்மாவுக்கு**

*விழிசிட்டி தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ. சடமர்ஷண, சி.சிவபாதவிருதய ஐயர் தம்பதியரின் பௌத்திரியும் சிவஸ்ரீ சிவநாவுக்கரசுக் குருக்கள் [மூர்த்திக் குருக்கள்] மேனகாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியுமாகிய*
சௌபாக்கியவதி **விநோதாம்பாளை**

*கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்து வைப்பதற்கு இறையருள் துணையுடன் பெரியோர்கள் ஆசிகளுடன் நிச்சயிக்கப் பெற்று, மேற்படி முகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள், பந்துமித்திர சகிதம் பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

சமாவர்த்தனம்- 24.03.2006 காலை 6 மணி மணமகன் இல்லம், கல்வியங்காடு
முகூர்த்தம்- 24.03.2006 காலை 7.34-9.12மணி மணமகள் இல்லம், கட்டுடை
வதுவர கிரஹப் பிரவேசம் பிற்பகல் - 4 மணி மணமகன் இல்லம், கல்வியங்காடு

*வரவேற்பு உபசாரம்*

**மணமகன் இல்லம்**
சிவஸ்ரீ கு.கமலபூஷணக் குருக்கள்
லலிதாம்பா தம்பதிகள்
வீரபத்திரர் வீதி, கல்வியங்காடு.

**தங்கள் நல்வரவை நாடும்:**
*(இருவீட்டார் அழைப்பு)*

**மணமகள் இல்லம்,**
சிவஸ்ரீ சி.சிவநாவுக்கரசுக் குருக்கள்,
மேனகா தேவி தம்பதிகள்
கட்டுடை மேற்கு, கட்டுடை, மானிப்பாய்.

(48436)(26.14.45)



# பதவி வெற்றிடம்

**யாழ்.நகரில் இயங்கிவரும் MAK Cost Cutter நிறுவனத் திற்கு கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. காசாளர்/ உதவியாளர் (இருபாலார்)
    வயதெல்லை : 18-25
    கல்வித்தகைமை: க.பொ.த(உ/த) சித்தி
    அடிப்படை கணனி அறிவு விரும்பத்தக்கது
02. பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்)
    வயதெல்லை: 25-50
    கல்வித்தகைமை: 8ஆம் வகுப்பு
03. களஞ்சிய உதவியாளர் (ஆண்)
    வயதெல்லை : 18-40
04. சுத்திகரிப்பு உத்தியோகத்தர் (ஆண்)
    வயதெல்லை : 40-55
05. சாரதி (ஆண்)
    வயதெல்லை: 18-40
    தகைமை: வாகனசாரதி அனுமதிப்பத்திரம்
    5 வருடத்திற்கு குறையாத முன் அனுபவம்

விண்ணப்பிக்க விரும்புவோர் 26-03-2006 இற்கு முன்னர் London English College,105, அரசடி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
*குறிப்பு:விண்ணப்பதாரர் விண்ணப்பப்படிவத்தில் தொடர்பிற்கான தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிட்டு அனுப்பவும்.*

(சி/48470)(26.14.45)

*ஆளணி முகாமையாளர்,*
MAK Cost Cutter (pvt) Ltd.

# தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்ட போதும் நீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை

## மல்லாவியில் மக்களுக்கு அசௌகரியம்

மல்லாவி நகர்ப் பகுதியில் நீர்த்தாங்கி, கிணறு, நீர்க் குழாய்கள் என்பன இருந்தும் நீர் விநியோகம் நடைபெறாததால் அப்பகுதி குடியிருப்பாளர்கள் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேசத்திலுள்ள மல்லாவி நகர்ப் பகுதியில் நீர்ப் திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் நீர்த்தாங்கி கிணறு, நீர்க் குழாய்கள் ,என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எனினும் இதுவரை நீர்விநியோகம் இடம்பெற வில்லை.

தற்போது மல்லாவி நகரில் குடிதண்ணீருக்கு மக்கள் பெரும் தட்டுப்பாட்டை எதிர்நோக்குகின்றனர். பொதுமக்கள், வர்த்தகர்கள், உணவுக் கடைக்காரர்கள் எனப் பலரும் நீண்ட தூரம் சென்று குழாய்க் கிணறுகளில் நீர் பெற்று வருகின்றனர். நீர்த் தாங்கி கட்டப்பட்டும் இன்று வரையும் நீர் விநியோகம் இடம்பெறாதது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-307)

## தேவிபுரத்தில் முன்பள்ளி திறப்பு

உடையார்கட்டுப் பிரதேசத்திலுள்ள தேவிபுரம் விக்கி குடியிருப்பில் மாவீரர் வெங்கண்ணண் முன்பள்ளி அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

(த-307)

## துணுக்காய் பிரதேசத்தில் மதகுகள் அமைப்பு

மல்லாவி,மார்ச் 23

துணுக்காய்ப் பிரதேசத்தில் 20 மதகுகள் அமைப்பதற்காக 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மதகுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் துணுக்காய்ப் பிரதேச சபையுடன் இணைந்து துணுக்காய் உதவி அரச அதிபரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-322)

## கல்விளானில் தையல்பொருள் கண்காட்சி

மல்லாவி,மார்ச் 23

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் துணுக்காய் உதவி அரச அதிபர் பணிமனையில், கல்விளான் கிராமத்தில் நடத்தப்பட்ட தையல்பயிற்சி நெறியின் நிறைவு விழாவும் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 5ஆம் திகதி கல்விளான் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தையல் பயிற்சி நெறியின் ஆசிரியர் திருமதி ச.நர்மதவாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை கிராமசேவகர் சண்முகநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் நா.நந்தகுமார் கண்காட்சி மண்டபத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

பயிற்சியை நிறைவுசெய்த பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களை கல்விளான் அ.த.க. பாடசாலை அதிபர் பொன்.ரஞ்சன், துணுக்காய்ப் பிரதேச செயலக தையல் பயிற்சிப் போதனாசிரியர் திருமதி தே.கேதீஸ்வரராணி ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்களில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டுத் தையல் பொருள்களை ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர். (த-322)

## சிறுவர் பாதுகாப்பு திட்டம் குறித்து கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட சர்வோதய நிலையம் 'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் பூநகரிப் பிரதேசத்தில் 2006 - 2007 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படவிருக்கும் சிறுவர்களுக்கான பாதுகாப்பு வலைப்பின்னல், திட்ட அறிமுகக் கருத்தரங்கு கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பரந்தன் சர்வோதய நிலையத்தில் நடைபெற்றது. அரச அரச சார்புற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்காக இக்கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

நிகழ்வில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து திட்டம் பற்றிய விளக்க உரையை செல்வி பிரியங்கா அபே குணவர்த்தனா நிகழ்த்தினார்.

இத்திட்டத்தின் அடிப்படையில் ஆழிப் பேரலையினாலும் போரினாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளவள விருத்திக்கான மாலை நேர செயற்பாட்டுக் கல்வியும் சிறுவர்களுக்கான பகல் பராமரிப்பு நிலையங்களும் செயற்படுத்தப்படவுள்ளன.

பூநகரிப் பிரதேசத்தில் நல்லூர், கிராஞ்சி வலைப்பாடு, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, ஞானிமடம், கறுக்காய் தீவு, பரமன்கிராய், கௌதாரிமுனை, வினாசி ஓடை ஆகிய கிராமங்களே இத்திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இக் கருத்தரங்கில் மாவட்ட அரச சார்புற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை பிரதேச, உள்ளூர் நிறுவன இணைப்பாளர் யுனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த கல்யாணி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-307)

## காவல்துறை நடுவப் பணியகத்தில் அன்னை பூபதியின் அஞ்சலி நிகழ்வு

கிளிநொச்சி,மார்ச்23

தியாகி அன்னை பூபதி அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த 19ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழீழ காவல்துறையின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் க.கண்ணாளன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரை தமிழீழ காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவு கண்காணிப்பாளர் பா.இயலரசன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் சி.மாதவன் ஏற்றி வைத்தார். தியாகி அன்னை பூபதியின் திரு வுருவப் படத்திற்கான ஈகச் சுடரைத் துணை ஆய்வாளர் சிவஞானசரஸ்வதி ஏற்றிவைத்தார். மலர்மாலையை முதன்மை ஆய்வாளர் சி.குணரத்தினம் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம், அகவணக்கம், உறுதியுரை என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் காவல்துறை அதிகாரிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-307)




## அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பாடசாலை மாணவர்கள் பேரவதி

கிளிநொச்சி,மார்ச்23

கண்டாவளை கல்விக் கோட்டத்திலுள்ள நாகேஸ்வரா வித்தியாலயம் கட்டட வசதிகள் இன்றியும் குடிதண்ணீர் வசதி இன்றியும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகிறது. சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மிகப் பழைமைவாய்ந்த புளியம்பொக்கனை - கலவெட்டித்திடல் கிராமத்தில் 1943ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இன்றுவரை இங்கு குடிதண்ணீர் கிணறு இல்லை. பாடசாலைக்கான வேலிகூட சீரான முறையில் அமைக்கப்படவில்லல.

இப்பாடசாலைக்கு ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்ட 70x20 அடி அளவு கொண்ட கட்டடம் ஒன்றில் அதிபர் அலுவலகம் உள்ளடங்கலாக 50x20 அடி அகலம் கொண்ட மற்றொரு கட்டடத்திலுமே வகுப்புகள் நடைபெறுகின்றன.

இப்பாடசாலையில் நல்ல தண்ணீர் கிணறு ஒன்று கூட இல்லை. பாடசாலை வளாகத்தில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரம் சென்றே தண்ணீர் அள்ளிவருகின்றனர்.

இதனால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதைக் காண முடிகிறது.

இந்தப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் வசதியீனங்களை நிவர்த்தி செய்வதற்கு கல்விச் சமூகத்தினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (த-307)



பல்லவராயன் கட்டு, சோலை பொது நோக்கு மண்டபத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பொதுக் கிணறு மிகவும் சேதமடைந்துள்ளது. இதனால் மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (படம்: பொ.தங்கராசா)

## எழுத்தாளர் ஜே.டானியல்

### ஒரு பார்வை



பிரபல எழுத்தாளர் ஜே.டானியல் மறைந்து இன்றுடன் 20ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இதனை ஒட்டி அவரது நாவல்களின் தொகுப்பு நூல் இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிடப்படுகிறது.

இதனை சிறப்பிக்கும் முகமாக எழுத்தாளர் டானியலைப் பற்றி டானியலின் எழுத்துக்கள் என்ற நூலில் வெளியான பதிவுகளில் சிறு பகுதியை இங்கு தருகிறோம்.

டானியல் வாழ்நாள் பூராவும் சுறுசுறுப்புடன் இயங்கிய உழைப்பாளி. அவரது நூல்கள் பலவும் சமூகத்தில் விமர்ச்சிக்கப்பட்டன. அவரது நூல்களின் வெளியீட்டு விழாக்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் பல தடவைகள் நடைபெற்றுள்ளன.

பல்வேறு விதமான நண்பர்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் டானியல் பெற்றுக் கொண்டாரெனினும், அதேயளவுக்குக் கொள்கை ரீதியாக முரண்படுவோரையும் டானியல் சந்தித்துள்ளார். அவர் புகழோடும் பொருளோடும் வாழுகின்ற காலத்தில் கூட சில மனிதர்கள் அவரை 'நீர் என்ன சாதி' எனக்கேட்டு அவமானப்படுத்தியுள்ளனர். அந்த ஆதங்கம் இறுதிவரை அவரது உள்ளத்திலும் எழுத்துக்களிலும் பிரதிபலித்துக் கொண்டேயிருந்தது.

டானியலின் நாவல்களில் கட்டுக்கோப்பாக அமைந்த கானல், அடிமைகள் ஆகியன எந்தப் பரிசினையும் பெறவில்லை. ஆனால் பஞ்சமர், தண்ணீர் முதலானவை பரிசுகளைப் பெற்றுள்ளன. இதன் மூலமாக விருதுகளுக்கும் இலக்கியத் திறமைக்குமான தொடர்பை ஊகித்தறிய முடிகிறது. டானியலைப் பொறுத்தவரை தன்னாலான இலக்கியப் பணியை ஆற்றி விட்டதாக நிறைவு கண்டுள்ளார்.

உடல் தளர்வுற்ற நிலையிலும் அவர் செய்த பணி பாராட்டுக்குரியது. அவர் ஒரு சமூக விடுதலையாளனாகவும் இலக்கியப் படைப்பாளியாகவும் அரசியல்வாதியாகவும் குடும்பத்தலைவராகவும் தன்னை இனங்காட்டிவிட்டு மறைந்துவிட்டார். அவரது இலக்கியப் பணிகள் - சமூகப் பணிகள் - அரசியற் பணிகள் பூரணமாக ஆய்வு செய்யப் படவேண்டியவை.

## உபகரணங்கள் அன்பளிப்பு

மல்லாவி,மார்ச்23

போரூட் நிறுவனத்தால் மல்லாவி கலைக் குழுவிற்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான இசை உபகரணங்களும், யோகபுரம் மத்திய விளையாட்டுக் கழகத்துக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

(த-322)

## மல்லாவி நுண்கலைக் கல்லூரியில் மாதாந்த தமிழிசை அரங்கு

மல்லாவி,மார்ச்23

மல்லாவி நுண்கலைக் கல்லூரியின் மாதாந்த தமிழிசை அரங்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி இசை ஆசிரியர் மா.தேவகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் இளையோர் தமிழிசை அரங்கு நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு இசை அரங்காக இசைக் கலாவித்தகர் சி.சிவசந்தியமோகனின் சிறப்பு இசையரங்கு நடைபெற்றது. இதில் நுண்கலைமாணி க.கண்ணதாசன் மிருதங்கம் வாசிக்க, இசைக் கலைமாணி திருமதி ஸ்ரீ.சுபத்திராதேவி வயலின் வாசித்தார்.

இந்த நிகழ்வில் பெருமளவான ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். (த-322)

## தமிழீழ வைப்பகத்தால் கோவைகள் அன்பளிப்பு

மல்லாவி,மார்ச்23

அரசின் காணிப் பகுதியினரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் காணி அனுமதிப் பத்திரங்களைப் பாதுகாப்பாகப் பேணுவதற்காக, தமிழீழ வைப்பகத்தால் கோவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ வைப்பகத்தின் கழக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தினபடி, இதற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கோவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் கடந்த 8ஆம்திகதி துணுக்காய் பிரதேச மக்களின் நலன்கருதி, துணுக்காய்ப் பிரதேச செயலகத்திற்கு ஒரு தொகுதி கோவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இக் கோவைகளை தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் வீ.சோழமறவன் துணுக்காய்ப் பிரதேச செயலர் நா.நந்தகுமாரிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர்கள், பிரதேச செயலகப் பணியாளர்கள் மற்றும் தமிழீழ வைப்பகத்தின் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-322)

## மல்லாவியில் திறந்த வெளி அரங்கு

மல்லாவி,மார்ச்23

'நிகொட்' நிறுவனத்தின் முன்னேற்பாட்டுத் திட்டத்தின் கீழ் மல்லாவி மத்தியில் அமைந்துள்ள துணுக்காய் பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் திறந்த வெளி அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 12 லட்சம் ரூபா செலவில் துணுக்காய் பிரதேச சபையின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுவரும் இக் கட்டடத்திற்கான அடிக்கல் துணுக்காய்ப் பிரதேச செயலர் நா.நந்தகுமாரினால் கடந்த மாதம் நாட்டப்பட்டது. (த-322)

## பற்சிகிச்சைமுகாம்

மல்லாவி,மார்ச்23

தமிழீழ சுகாதார சேவையின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவினரும் பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரும் இணைந்து கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூநகரி கௌதாரிமுனை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பற்சிகிச்சை மற்றும் பொது மருத்துவம் சம்பந்தப்பட்ட பல சிகிச்சைகளை வழங்கினர்.

## மல்லாவிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

மல்லாவி,மார்ச் 23

மல்லாவிப் பகுதியில் விசர்நாய்கள் மூலமாகப் பரவும் நீர் வெறுப்பு நோயை கட்டுப்படுத்தும் முகமாக வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகிறது.

இப்பணியை துணுக்காய் பிரதேச சபையுடன் இணைந்து மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற் கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்திலும் மக்களுக்கு முன்னறிவித்தல் வழங்கி பொது இடங்களில் வைத்து நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. யோகபுரம் மேற்கு, யோகபுரம் கிழக்கு, அனிஞ்சியங்குளம் ஆகிய கிராமங்களில் இப்பணி பூர்த்தியடைந்துள்ளது. தொடர்ந்தும் துணுக்காய்ப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் இப்பணி தொடரும் என பிரதேசசபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-322)

## கூட்டெரு தயாரிப்பு அறிமுகநிகழ்வு

யாழ்.மாநகர சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட வீட்டுக் கழிவுகளை கூட்டெருவாக மாற்றும் திட்டம் பற்றிய அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாஷையூர் கல்யாண மண்டபத்தில் பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலையத்தின் தலைவர் எ.பாலதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுற்றுச் சூழல் அதிகாரி எஸ்.சூரியராஜ், சனசமூக நிலையங்களின் உத்தியோகத்தர் எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டு விளக்க உரையினை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பாஷையூர் மாதர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (3-190)


7 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 23 - 07 - 1948



மறைவு 09 - 04 - 1999

அமரர் பசுபதிப்பிள்ளை சுப்பிரமணியம் B.A.
(அளவையியல் ஆசான்)
திதி: 23-03-2006 அபரபக்க அட்டமி

நினைப் பிரிந்து வருடங்கள் ஏழு நீங்கிடினும்
நீங்காது நின் நினைவு எம் இதயமதிலிருந்து....

அரசடி,
கொக்குவில். (சி/46541)(26.15.14)
மனைவி, மகன், சோதரர்கள்.


## பல்வேறு திட்டங்களுக்கு ஐ.ஓ.எம். உதவி

நல்லூர், மார்ச் 23

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பு (I.O.M.) இந்தியாவில் இருந்து மீளக் குடியமர்ந்தவர்களுக்கான தற்காலிக வீட்டுத் திட்டம், மலசலகூடத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக அனலைதீவில் மூன்று குடும்பங்களுக்கும் நெடுந்தீவுப்பகுதியில் 4 குடும்பங்களுக்கும் உதவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தீவுப்பகுதியில் இந்தியாவில் இருந்து மீள்குடியமர்ந்த 8 குடும்பங்களில் ஆறு குடும்பத்திற்குரிய வீட்டுத்திட்டம், மலசல கூடத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும்-

இவற்றைத் தவிர எட்டுப் பொதுக்கிணறுகளில் சாவகச்சேரி, உடுவில், புங்குடுதீவு, சண்டிலிப்பாய் பகுதிகளில் 4 பொதுக்கிணறுகள் திருத்தப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 15 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 92 பேருக்கு மீன்பிடி, விவசாயம், தச்சுத்தொழில், கட்டடத் தொழில், தையல் பயிற்சி போன்ற பல்வேறு தொழிற்பயிற்சிகளை வழங்கியதுடன் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 20 ஆயிரம் வரை இந்த நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-111)


அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி விழா



மேற்படி ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி விழா எதிர்வரும் ( 'குனி மாதம் 13ஆம் திகதி(27-03-2006) திங்கட்கிழமை நடைபெற அம்பாள் திருவருள் பாலித்துள்ளார்.

அடியார்கள் விழாவுக்குத் தேவையான பொருள்களை முதல் நாளே ஆலயத்தில் கொடுத்து, விழாவிலும் கலந்து சிறப்பித்து அன்னை அருள் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: 768 ஆர் இலக்க சிற்றூர்திகள், பேருந்துகளில் பயணம் செய்வதால் நேரடியாக ஆலயத்தைச் சென்றடையலாம் என்பதனை நினைவூட்டுகின்றோம்.

தவளக்கிரி. (48416)(26.15.14) பரிபாலனசபையினர்.

324, Palaly Road, Jaffna.
தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
MOBILE NET MCS COMPUTER SERVICES
BIT



கொழும்பு பல்கலைக்கழகத்தின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  *(O/Lஇல் C தகைமை பெறாதோர் A/Lஇல் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். A/L-Bio, A/L-Maths, Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  *A/L 2006 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம், ஆயினும் பெறுபேறுகளின்போது மேற்குறித்த தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். (Certificate in Information Technology)
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- BIT கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு சுவீடன் பல்கலைக்கழகத்தில் Diploma கற்கைநெறியினை பயிலும் சந்தர்ப்பம்.
- BIT கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு MCS நிறுவனத்தின் Diploma in Information Techonology சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 10-04-2006
விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில்
MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

20 மணித்தியாளத்தில்
வீடியோ மிக்சிங் & போட்டோ ஷொப்
தமிழில் இரவுநேர வகுப்புக்கள்
Adobe Premiere 6.5 / Pro - For Edting
Pinnacle Studio 9 Plus - For Title & Edting
Ulead Cool 3D Studio - For Title
Crystal 3D Impact Pro - For Title
Hollywood FX 4.6/5.0/5.5
Indian Cinthamani Effects
Adobe Photoshop 7.0/CS
திங் - புதன் - வெள்ளி
இரவு 7.00 மணிக்கு.
சுழிய செயன்முறை வகுப்புக்கள் குறைந்த கட்டணம் - பயிற்சியின் முடிவில்
வேலைவாய்ப்புக்கள் என்பன வழங்கப்படும்.
விபரங்களுக்கு: கணனியியல் கல்லூரி
கே.கே.எஸ் வீதி இணுவில் T.P: 222 7643

வாருங்கள்!!! பயன் பெறுங்கள்!!! இருநாட்கள்!!!

நாம் தொடங்குவோம்...

சர்வதேச மகளிர் தினம் - 2006
கிராமிய மகளிர் குழுக்கள் சங்கமிக்கும் பல்நிகழ்வுத் திடல்



காலம்: 25-26 மார்ச் 2006
இடம்: OLR பாடசாலை மைதானம் யாழ்ப்பாணம்.

- விற்பனை நிலையங்கள்
- கண்காட்சிகள்
- பேச்சுக்கள்
- பரிசில்கள்
- நாடகம்
- தேனீர், குளிர்பானம், சிற்றூண்டிச் சாலை

அனைவரும் வந்து பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

LET'S START
International Womens day - 2006
SGBV Working group
Jaffna
Tel: 021-2222005/6078

பால், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்குழு
யாழ்ப்பாணம்.
தொலை.இல. 021-2222005/6078

# கொளுத்தும் வெய்யிலிலும் சோதனைக் கெடுபிடிகள் தீவகப் பயணிகளுக்குக் கடற்படையால் தொல்லை!

தீவகத்தில் இருந்து வேறு பகுதிகளுக்குப் பயணிக்கும் மக்கள் குறிகாட்டுவான், மடத்துவெளி, அல்லைப்பிட்டி, பண்ணை போன்ற பகுதிகளில் கடற்படையினரால் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

பயணிகள் நீண்ட நேரம் கொளுத்தும் வெய்யிலில் காத்து நிற்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

தீவகத்தில் இருந்து பயணம் செய்யும் பயணிகள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் நீண்டநேரம் தடுத்து நிறுத்தப்பட்டு அவர்கள் கொண்டுவரும் பொதிகள், அடையாள அட்டை என்பன கடுமையாகச் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

மடத்துவெளிப் பகுதியிலும் வயது முதிர்ந்தோர் தொடக்கம் குழந்தைகளுடன் செல்லும் பெண்கள் வரை சகலரும் இறக்கப்பட்டு நீண்டதூரம் நடந்து செல்லவேண்டியிருப்பதுடன் வாகனம் சோதனையிடப்பட்டு வரும்வரை வெய்யிலில் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அண்மையில் அரச ஊழியர்கள் சிலர் வாகனத்தை விட்டு இறங்காமையால் ஒரு மணித்தியாலம் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று அல்லைப்பிட்டி, பண்ணை போன்ற பகுதிகளிலும் பயணிகள் இறக்கப்பட்டு சிறிதுதூரம் நடந்துசென்று பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமைகள் மூலம் தீவகத்தில் இயல்வு வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகியிருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சோதனைச் சாவடிகளில் நீண்டநேரம் பயணிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றமையால் வைத்தியசாலைக்காகச் செல்லும் நோயாளர்களும் அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களும் குறிப்பிட்ட நேரத்துக்குக் கடமைக்குச் செல்ல முடியாது சிரமப்படுகின்றனர்.

(த-188)

## சக்கோட்டை சவேரியார் ஆலய ஆண்டுவிழா நிகழ்வு

குருநகர்,மார்ச்22

சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருவிழாவும் புனித பிரான்சிஸ் சவேரியார் பிறப்பின் ஐநூறாவது ஆண்டு நிகழ்வும் கடந்த 13ஆம் திகதி சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கடந்த 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகை ஒப்புக்கொடுத்தார்.

அவருடன் யாழ். மறைக் கோட்ட முதல்வர் வண.பிதா மைக்கல் செளந்தரநாயகம் அடிகளாரும் கலந்துகொண்டனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் புனிதரின் திருச்சொரூப பவனி மற்றும் திருச் சொரூப ஆசீரும் இடம்பெற்றன.

(த-51)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மானிப்பாய்,கட்டுடையில் சிறுதானிய செய்கை; கால்நடைகளைக் கட்டிவளர்க்க அறிவுறுத்து!

வலி.தென்மேற்கு,மார்ச்23

மானிப்பாய் மேற்கு மற்றும் கட்டுடை பகுதிகளில் நெல்அறுவடையின் பின்பு விவசாயிகளால் வயற்காணிகளில் எள்ளு, பயறு, சணல் போன்ற சிறு தானியங்கள் விதைக்கப்பட்டு செய்கை பண்ணப்பட்டு வருவதால் கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டிவளர்க்குமாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்பகுதியில் கடந்த வாரம் சில விவசாயிகள் தமது வயற்காணிகளில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கையை கட்டாகாலி ஆடு, மாடுகள் வந்து மேய்ந்து அழித்து வருவதாகச் சம்மேளனத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, பயிர்களை மேய்ந்து கொண்டிருந்த இரு ஆடுகளும் மூன்று மாடுகளும் சம்மேளனத்தின் பிடிகாரர்களால் பிடிக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளன. பயிரழிவுக்கு 2 ஆயிரம் ரூபா நஷ்டஈடு செலுத்திவிட்டு இந்த ஆடு, மாடுகளை மீட்டுக்கொண்டு செல்லுமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு சம்மேளனம் அறிவுறுத்தியுள்ளது.

(த-135)

# புங்குடுதீவு அஞ்சலகத்துக்கு தந்தித் தூதுவர் நியமனம்!

புங்குடுதீவு அஞ்சலகத்துக்கு பல வருடங்களாக நிரப்பப்படாது இருந்த தந்தித் தூதுவர் நியமனம் தற்போது வழங்கப்பட்டு இருப்பதாக புங்குடுதீவு அஞ்சல் அதிபர் ச.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு அஞ்சலகத்தில் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் தந்தித் தூதுவர் நியமிக்கப்படாமையால் தபால் ஊழியர்களே தந்தி தூதுவர் சேவையினையும் மேற்கொண்டு வந்தார்கள்.

இங்கு நாளாந்தம் தந்திச் சேவைக்கான தேவை அதிகரித்த நிலையிலும் உடனடியாக தந்திச் சேவையினை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப் பட்டதாகவும் -

தற்போது தந்தி தூதுவர் நியமிக்கப்பட்டதன் மூலம் தந்திச் சேவையினை உடனுக்கு உடன் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.(த-188)

# நெடுந்தீவு பிரதேச பாடசாலைகளில் சமூக உளவியல் நிகழ்ச்சித்திட்டம்

நல்லூர்,மார்ச் 23

நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகளில் சமூக மற்றும் உளவியல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படுகிறது. நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி, சிக்கிரியாம்பள்ளம் அ.த்.க.பாடசாலை ஆகியவற்றில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் இத்திட்டம் நடைமுறைப்படுகிறது.

இதில் பங்குகொள்ளும் மாணவர்கள் மாலை 5.30 மணிவரை விளையாட்டுகளில் கலந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு உணவும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

இதற்கென நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மூவர் நியமிக்கப்பட்டிருப்பதுடன், அவர்களின் போக்குவரத்து வசதிக்கென துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டங்களுக்குப் பொறுப்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர் ம.இளங்கோ, நெடுந்தீவுப் பிரிவுத் தலைவர் எ.அருந்தவசீலன் அகியோர் பணியாற்றுவார்கள்.

(த-111)

# பண்டத்தரிப்பில் இப்போது வைரஸ்காய்ச்சல் பரவுகிறது!

வலி.தென்மேற்கு,மார்ச்23,

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் வைரஸ்காய்ச்சல் மற்றும் இன்புளுவென்சா, சளிக்காய்ச்சல் ஆகிய நோய்களுக்குச் சிகிச்சை பெறுவதற்காகத் தினமும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் வருகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இப்பகுதியில் நிலவும் கடும் வெய்யிலும் வெப்பமுமான சுவாத்திய நிலை நிலவிவருவதாலேயே இந்த நோய்களுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

குடும்பத்தில் ஒருவருக்கு இருமல், சளிக்காய்ச்சல் ஏற்படுமிடத்து ஏனையவர்களுக்கும் எளிதில் தொற்றிக்கொள்ளுகின்றது.

காய்ச்சல் பீடித்த நோயாளர்களிடமிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு பரிசோதனைக்காகச் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுவருகின்றது.

இதேவேளை, சங்கானை அரசினர் வைத்தியசாலையிலும் காய்ச்சலுக்குக் சிசிக்கை பெறும் நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

(த-135)

# தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட 24 பாடசாலைகளில் ஆய்வுகூடம் இல்லை!

## கல்விப் பணிப்பாளர் விசனத்துடன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்23

தென்மராட்சி கல்வி வலயத்தில் 24 பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை. இதனால், அந்தப் பாடசாலைகளின் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் விசனத்துடன் இதனைச் சுட்டிக்காட்டினார்.

தென்மராட்சி கல்வி வலயத்தல் 33 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 24 பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை.

தரம் 6 முதல் 11 வரையுள்ள வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடம் இன்மையால் மாணவர்கள் விஞ்ஞானபாட நேரத்தில் செயன்முறைப் பயிற்சிகளுக்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது இந்த மாணவர்கள் செய்முறைப் பயிற்சிகளை வகுப்பறைகளில் நடத்தி வருகின்றனர். இருப்பினும், அந்தப் பயிற்சிகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களும் இரசாயனப் பதார்த்தங்களும் தட்டுப்பாடாக உள்ளன.

இத்தகைய நிலையினை நிவர்த்திசெய்து தருமாறு பல தடவை கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றார்.

இந்தக் கருத்தைக் கேட்டறிந்த வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். ரங்கராஜா இந்தப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடத்தை அமைப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

(த-13)

# ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரணி வடக்கில் பல்வேறு பணிகள்

தென்மராட்சி,மார்ச்23

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரணி வடக்குப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

இங்கு நிறுவப்பட்டுவரும் பொது மண்டபத்தின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விரைவில் இந்த மண்டபம் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

இப்பகுதியில் சுமார் 25 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றும் அமுல் செய்யப்பப்படவுள்ளது. அதேவேளை, குடிதண்ணீர் திட்டம், வீதி அமைப்பு போன்ற பல அபிவிருத்தித் திட்டங்களையும் இந்த அமைப்பு இங்கு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு வதியும் குடும்பங்களில் பலர் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. வீடு அமைப்பதற்கு உரிய பொருள்களான சிமெந்து, மண், கல் போன்றவற்றை இந்த நிறுவனம் வழங்கவுள்ளது.

(த-122)

# திருநெல்வேலியில் தையல் கண்காட்சி

வலி.வடக்கு,மார்ச்23

நல்லூர் பிரதேச செயலகத்தில் வடக்கு - கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்களின் கண்காட்சி திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். மாவட்ட செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, கிராம அலுவலர் க.நித்தியானந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தார்கள்.

கண்காட்சியை திருமதி க.சிவலிங்கம் நாடாவெட்டி ஆரம்பித்துவைத்தார். (த-86)



முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தையல் கண்காட்சி மண்டபத்தை விருந்தினர்கள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## தவக்காலச் சிந்தனை 23

### உண்மைக்குச் சாட்சிய வாழ்வு

உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுவது உண்மையாகும். உள்ளதை இல்லாதென்றோ அல்லது இல்லாததை உள்ளதென்றோ திரித்துக்கூறுவது பொய்யாகும். மனித வாழ்வில் பொய் புரட்டுகள் மேலோங்கி விட்டால் வாழ்வு முழுவதுமே போலியாகி விடுகிறது. வசதிக்கு ஏற்றபடி வாழ்வை அமைத்துக்கொள்ளும்போது மனிதர்கள் பொதுவாக போலிகளாக வாழ்கிறார்கள்.

எப்படியும் வாழ்க்கை இருக்கலாம் என்றால் அது பொய் புரட்டுகளைக் கொண்டதாகவே இருக்கும். இறைவனின் வழிமுறைகளுக்கு ஏற்ப இப்படித்தான் வாழ்க்கை இருக்கவேண்டும் என்றால் அது உண்மை உள்ளதாய் இருக்கவேண்டும். உண்மையும் நேர்மையும் உள்ள வாழ்வு இறைவனிடம் இருந்து வருகிறது. உண்மை நேர்மையுள்ள வாழ்வு வெளிச்சத்தைக் கொண்டிருப்பது போன்று பொய்புரட்டுகள் உள்ள வாழ்வு ஒளிவு மறைவுகளைக் கொண்டது.

இயேசுவை இதயத்தில் கொண்டுள்ள நாம், தொடர்ந்து தீமையின் தலைவனோடு போரிட்டு வெல்ல அழைக்கப்படுகிறோம். இந்தச் சமூகத்தை இறைவனின் அரசாக மாற்றும் நிலையில் தீமையின் ஆதிக்கத்தை வெல்ல நல்ல சக்திகளெல்லாம் ஒன்றிணைக்கப்படவேண்டும். உண்மை ஓங்கி ஒலிக்கவேண்டும். அது இறைவனை மட்டும் மையங்கொண்டு உண்மைக்குச் சான்று பகர்வதாய் இருக்கும். அது பொய்யைக் கண்டு அஞ்சாது. இந்தச் சாட்சியத் துணிவு மகிழ்ச்சியான வாழ்வைத் தரும்.

- ஜே.கீதபொன்கலன், ஆனைக்கோட்டை.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 31 - 03 - 1923

அம்மன் மடியில் 12 - 04 - 2004



## அமரர் பண்டாரி வேலாயுதம்

(மட்டுவில் தெற்கு சாவகச்சேரி, வேரற்கேணியடி)

திதி:23.03.2006

புயல் ஒன்று அடித்து ஆண்டு இரண்டு போனதப்பா
உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப் போகாது
எங்கள் உயிர் உள்ளவரை,
இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த காலங்கள்
எம் மனதை விட்டு அகலாது

எங்கள் அன்புத் தெய்வமே!
ஏணியாய் இருந்து எம்மை ஏற்றத்தில் ஏற்றிவிட்டு
எங்கப்பா சென்றீர்கள்...

எம் ஆருயிர் அப்பாவே
எம் நினைவெல்லாம் நீங்காத பாசமிகு அப்பாவே
உங்கள் ஆசைப்பிள்ளைகள்
உங்கள் அரவணைப்பைத் தேடுகின்றோம்
தெய்வ அப்பாவே உங்களை நினைக்காத நாளில்லை

எத்தனை துயரங்கள் வந்த போதும்
அன்போடு அரவணைத்து எம்மை எவருக்கும்
அஞ்சாது தனித்து நின்று தன்கையே தனக்குதவி
என்று எடுத்துரைத்த தெய்வ அப்பாவே!

எதுவுமே புரியாததால் புழுங்கித் தவிக்கின்றோம்
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(48320)(51-

# சமய சந்நிதிகளில்

மாதகல் பாணா வெட்டி ஸ்ரீ புவனேஸ் வரிஅம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 10ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை சைவப்புலவர் கநித்தியதசீதரன் "பாவையர் வாழ்வே பத்தினி" என்ற விடயம்பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(த-135)

* * *

மானிப்பாய் மேற்கு, கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று, அடுத்த மாதம் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற வுள்ளன.

(த-135)

# தேர்தல் கடமை நியமனங்கள் ரத்து

யாழ்ப்பாணம், மார்ச் 23

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தேர்தல் கடமைக் களைப் புரிவதற்காக நியமிக்கப்பட்ட ஊழியர்களின் நியமனங்கள் நாளையுடன் ரத்தாகின்றன.

யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பல்வேறு மாவட்டத்திலும் தேர்தல் கடமைக்கென அலுவலர்கள் நியமிக்கப்படவிருந்தனர்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்படும் தினம் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து அந்த அலுவலர்களின் நியமனங்கள் ரத்தாகின்றன என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(த-202-203)

# வட்டுக்கோட்டையில் இலவச கணனிப் பயிற்சி

வலி.தென்மேற்கு, மார்ச்23

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கவுள்ள இலவச கணனிப் பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழகத் தலைவர் லயன்ச.கனகரசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சித்தன்கேணி -வட்டுக்கோட்டை பிரதான வீதியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் 306 பி1 மாவட்ட ஆளுநர் சரத் குணசேகரா கலந்துகொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்துவைப்பார்

பிரதி செயலர் (வடக்கு) லயன் .எஸ். ஞானராஜா உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.

வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இப் பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(த-135)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பெற்றோர் மகிழ 24 - 04 - 1964

உற்றார் கதற 21 - 02 - 2006



## அமரர் கிருஷ்ணபிள்ளை சிறீமுருகன்

இமையம் சரிந்து இன்று நாள்கள்- முப்பத்து ஒன்று
குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து இன்று நாள்கள்- முப்பத்து ஒன்று
முழு நிலா மறைந்து இன்று நாள்கள் - முப்பத்து ஒன்று
பிரிவுச் சுமையைத் தாங்கத் தொடங்கி இன்று நாள்கள் -முப்பத்து ஒன்று
ஆறாத் துயரில் மூழ்கத் தொடங்கி இன்று நாள்கள்-முப்பத்து ஒன்று
சிறீமுருகன் முருகனடி சேர்ந்து இன்று நாள்கள் - முப்பத்து ஒன்று

தூரப்பலம்,
இமையாணன் மேற்கு. (48376)(51-

முடிவற்ற சோகத்துடன்:
-குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

வித்தாய் 20 - 12 - 1935

வேராய் 07 - 03 - 2002



## அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி: நவமி

அன்பு அப்பாவே ஆற்றாது தவிக்கின்றோம்
ஆவிழந்த கன்றாகி தனித்துப் போனோம்
இன் முகத்தை காணாது எவ்வழியும் தேடுகின்றோம்
பற்றுடன் வந்தொருக்கால் பார்த்து நீர் போனாலென்ன?
சிந்தை தனில் மக்கள் சிரம் தாழ்த்தி வணங்குகின்றார்.

சங்கம் வீதி,
சங்கத்தானை,சாவகச்சேரி. (48308)(51-

-குடும்பத்தினர்.
(கனடா)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 - 04 - 1929

இறப்பு 24 - 02 - 2003



## திருமதி கந்தையா இரத்தினம்

திதி: மாசி அபர பக்க நவமி

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே அம்மா!
ஆண்டு மூன்று ஆனபோதும் ஆறவில்லை
அம்மா உன் நினைவு
மீண்டுமொருமுறை உன் முகத்ந்த
காண்பதெப்போ நாமிங்கே
எத்தனை ஆண்டுதான் சென்றாலும் எமை
விட்டகலாதம்மா உன் அன்பு

"செல்வகம்"
முல்லையடி, பளை.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(48250)(51-

PRINCE

துருப் பிடிக்காத உலோக கிச்சன் சின்க்

பிரின்ஸ்

நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கல்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.



Access Graphics

ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 524, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வளர்மதி கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# பல்கலை. அணி 6 விக்கெட்டுகளால் மானிப்பாய் அணியை வென்றது

வலி.வடக்கு,மார்ச்23

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் மற்றும் சனசமூக நிலையமும் இணைந்து அமரர்கள் ராஜன், விக்ரம், கங்கு ஞாபகார்த்தமாக நடத்தி வரும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான லீக் முறையிலான கிரிக்கெட் போட்டியொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் மோதிக்கொண்டன.

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 9 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

சிவசங்கர் 58, வினோத் 19, பார்த்தீபன் 17 ஓட்டங்களை ஆக்கக்கூடிய ஓட்டங்களாக தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

மணிவண்ணன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்




கெட்டுகளையும் பந்துலன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 23.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சர்வானந்த் 55 (ஆட்டமிழக்காது), கௌரிபாகன் 52 (ஆட்டமிழக்காது) மற்றும் தனுஷ்காந் 32 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்துள்ளார்கள்.

வினோத் 48 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் ஜெயரூபன் 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (3-86)

## விடிவெள்ளி அணி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம்,மார்ச்23

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 13 வயதுப் பிரிவினருக்கு இடையில் கடந்த வாரம் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் விடிவெள்ளி அணி வெற்றிபெற்றது.

விடிவெள்ளி அணியினரை எதிர்த்து வீனஸ் அணியினர் மோதினர்.

விடிவெள்ளி அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றனர். (3-190)

# வலி.மேற்கு பெரு விளையாட்டுக்கள் சம்பியனான அணிகள் விவரம்

வலி.மேற்கு,மார்ச்23

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட கழகங்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

**எல்லே**

ஆண்கள் - அராலி மாவத்தை வி.க.

பெண்கள் - மூளாய் வளர்மதி வி.க.

**மென்பந்து**

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் வி.க.

**கரபந்தாட்டம்**

ஆண்கள் - சங்கானை யுத் வி.க.

பெண்கள் - சங்கானை யுத் வி.க.

**கபடி**

பெண்கள் - சங்கானை யுத் வி.க.

24 விளையாட்டுக் கழகங்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றின. (3-175)

## விளையாட்டு விழா

வலி.மேற்கு, மார்ச் 23

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.30 மணியளவில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய விள்ளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சீ.எ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேல திக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ்.மாவட்ட தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திர பிள்ளை, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றொகான் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-175)

## மெய்வன்மைப்போட்டி

பருத்தித்துறை,மார்ச்23

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.அம்பலவாணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி.அருளானந்தமும் சிறப்பு விருந்தினராக மருதங்கேணி உதவி அரச அதிபர் த.ஜெயசீலனும் கலந்துகொள்வர். (3-118-202)



**யாழ்.இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.**

**நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவனும் ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பிரதம பாதுகாப்பு அதிகாரியுமான க. தர்மகுலசிங்கம் உரை நிகழ்த்துவதையும் - முதலிடம் பெற்ற காசிப்பிள்ளை இல்லத் தலைவரிடம் திருமதி நீலா.தர்மகுலசிங்கம் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில்.காணலாம்.**

(3-203)

# எல்லா நோய்களுக்கும் ஏற்றது ரிஷி காளான்

ஆறுவகைக் காளான்களில் இருந்து பெறப்பட்ட இளையங்களை ஒன்று சேர்த்து இளைய வளர்ப்பு மூலம் புதிய இனக் காளான்களை உருவாக்கி மருத்துவ உப உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து உலகளாவிய ரீதியில் விற்பனை செய்துவருகிறது டி.எக்ஸ்.என்.நிறுவனம்.

டி.எக்ஸ்.என்.நிறுவனத்தினரால் புதிதாக உருவாக்கிய காளானுக்கு ரிஷி என பெயர் சூட்டப்பட்டுள்ளது.


இக்காளான்களில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் சிறந்த மூலிகை உப உணவுப் பொருள்களாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருளாகிய ரிஷி காளான்களைப் பயிரிடும் முறைகள், அவற்றில் இருந்து உப உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் முறைகள், உற்பத்தி செய்யப்பட்ட மருத்துவ உப உணவுப் பொருள்கள் விற்பனை ஆகியன தொடர்பாக அகில இலங்கை சந்தை முகாமையாளர் டாக்டர் வித்தியா அருமைநாயகம் உதயனுக்கு செவ்வி அளித்துள்ளார்.

அச் செவ்வி வருமாறு:

கே: ரிஷி காளானின் தோற்றம் பற்றிக் கூறுவீர்களா?

ப: உலகில் 38 ஆயிரம் வகை காளான்கள் உள்ளன. அவற்றுள் 2 ஆயிரம் வகை



*இளைய வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட புதிய இனக் காளான்*

யான காளான்கள் மட்டுமே மனிதனின் உணவாகப் பயன்படுத்தலாம்.

இவற்றிலும் இருநூறு வகைக் காளான்கள் மருத்துவத் தன்மை கொண்டவை. அவற்றில் நோய்களைத் தடுக்கும் சக்தி உடைய ஆறு வகை காளான்கள் தெரிவு செய்யப்பட்டு அவ்வற்றில் இருந்து பெறப்பட்ட இளையங்களை ஒன்று சேர்த்து இளைய வளர்ப்பு செய்வதன் மூலம்தான் ரிஷி என்கின்ற சக்தி கொண்ட புதியஇனக் காளான் உற்பத்தி செய்யப்படுகின்றது.

கே: இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எங்குள்ளது? இதனுடைய விஸ்தரிப்புகள் பற்றிக் கூறுங்கள்?

ப: இந்த நிறுவனம் மலேசியாவை தலைமையகமாகக் கொண்டு செயற்படுகின்றது.


2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் சர்வதேச வைத்திய நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உற்பத்திப் பொருள்களை 53 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பனை செய்துவருகின்றது.

கே: இந்த நிறுவனத்தில் எவ்வகையான மருத்துவப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

ப: எமது நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பெரும்பாலான பொருள்கள் உணவாக உட்கொள்ளக்கூடியவை.

அத்தோடு தோல் நோய்களுக்கு பயன்படுத்தக் கூடிய கிறீம் மற்றும் சவர்க்காரம், சம்




போ அடங்கிய காரப்பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கே: உங்களுடைய நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருத்துவப் பொருள்கள் நோயை எதிர்க்கும் தன்மை கொண்டவையா? அல்லது நோயை முற்றாகக் குணமாக்கக் கூடிய தன்மை கொண்டவையா?

ப: உண்மையில் இந்தக் கேள்வி பொருத்தமான ஒரு கேள்வி தான்.

ஏனெனில், வாடிக்கையாளர்கள் உட்பட பெரும்பாலான மக்கள் எமது மருந்துப் பொருள்களின் பயன்பாடு தொடர்பான பூரண விளக்கம் இல்லாமல் உள்ளனர்.

உண்மையில் எமது நிறுவனத்தினரால் உற்பத்தி செய்யப்படுகின்ற மூலிகை மருந்துகள் நோய் எதிர்க்கும் சக்தி கொண்டவை. எனவே நோய் ஏற்பட முன்னர் சாதாரணமாக இதனைப் பயன்படுத்தலாம்.



இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் நோய்த் தாக்கங்களில் இருந்து ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்

கே: உங்களது நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துப் பொருள்கள் நோய் எதிர்க்கும் சக்தி கொண்டவை என்று கூறுகின்றீர்கள். எவ்வகையான நோயை எதிர்க்கும் தன்மை கொண்டவை என்று கூறுவீர்களா?

**செவ்வி: சுதாகரன்**

ப: காளானில் பல மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. குறிப்பாக மூலிகை மருந்துப் பொருள்கள் காளானில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

எனவே குறிப்பிட்ட ஒரு நோய்க்கு குறிப்பிட்ட ஒரு மருந்து என்பதில்லை. ஆனால், எமது மருந்துகளை உபயோகிப்பதனால் உடலில் உள்ள நோய்த்தாக்கத்தை எதிர்த்து ஆரோக்கியப்படுத்தமுடியும்.

குறிப்பாக ரிஷி மூலிகை மருந்துப் பொருள்களை பாவிப்பதனால் மனித உடலில் உள்ள சுவாச மண்டலம், நரம்பு மண்டலம், இரத்த ஓட்ட மண்டலம், ஜீரண மண்டலம், கழிவு மண்டலம், பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், இனப்பெருக்க மண்டலம், தோல் போன்ற தொகுதிகளை சீராக இயங்கச்செய்யும்.

கே: உங்களது நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் மருந்துப் பொருள்களின் பாவனைக்கு வயதுக் கட்டுப்பாடு உண்டா?

ப: இல்லை. எந்த வயதுடையவர்களும் எமது மூலிகை மருந்துகளைப் பாவிக்கலாம். குறிப்பாக குழந்தை பிறந்தநாளில் இருந்தே கொடுக்கலாம்.

கே: ஏற்கனவே சிகிச்சை பெற்று பிற மருந்தை உபயோகித்து வரும் நோயாளி ஒருவர் ரிஷி மூலிகை மருந்தைப் பயன்படுத்தும் போது முன்னர் பாவித்த மருந்தை இடைநிறுத்தலாமா?

(12ஆம் பக்கம் பார்க்க)



*செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையில் காப்புறுதி பெற்றிருந்த திருமதி பி.அன்னலிங்கம் என்பவரின் மரணத்தை அடுத்து அவருக்குரிய இழப்பீட்டுத் தொகையை அவரின் மகனிடம் கிளை முகாமையாளரான து.நிரோஜன் காசோலையை கையளிப்பதையும் அருகில் கிளை விற்பனை நிறைவேற்றுநர் ஜெ.பிரதீவ், நிற்பதையும் படத்தில் காணலாம்* (3)

# ஸ்ரீ வல்லிபுரா போட்டோ



திருமண வைபவங்களுக்கான கார், வான் சேவை, வீடியோ, புகைப்படப் பிடிப்பு, அல்பம் தயாரித்தல்

HOTLINE- 0777- 739673

நல்லூர் ஒளியருவி வீடியோ
B 440, பருத்தித்துறை வீதி,நல்லூர்.
021- 2222604

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ,
புலோலி தெற்கு,புலோலி.
021- 2263459.


## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் இந்துக் கல்லூரியின்
முன்னாள் ஆங்கில ஆசிரியர்

**அரசரத்தினம் பாலேந்திரா**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள்.
(48407)(26-39-14-16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்
30.01.1946

மரணம்
03.04.2005

அமரர்

**கார்த்திகேசு சிவசுப்பிரமணியம்**

திதி: 23.03.2006 வியாழக்கிழமை

பண்பின் சிகரமாய் பாரினிலே வாழ்ந்தீர்
உண்மைக்கு உறைவிடமாய் உலகமே வியக்க
அம்பிகையின் திருவடியை அனுதினமும் பணிந்து
தும்பிமுகன் சேவடியில் பெற்றிடுவீர் சாந்தியையே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

8/4, வைமன் வீதி,
நல்லூர்.
(சி.48478) (39-14-16)
தகவல்:
குடும்பத்தினர்.

## சண்டிலிப்பாயில் பாவனையாளர் சங்கம்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாவனையாளர்பாதுகாப்பு சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் சங்கம் அமைக்கப்பட்டது.

இச் சங்கத்தின் தலைவராக வி.சிற்றம்பலமும் செயலாளராக இளைப்பாறிய உப அதிபர் யே.பெ.அருமைநாயகமும் தெரிவு செய்யப்பட்டனர்.
(ஐ-185)

## சிற்றுண்டிகளின் விலைகள்அதிகரிப்பு

வலி.தென் மேற்கு,மார்ச்23

மாவின் விலை, சீனியின் விலை அண்மையில் அதிகரித்துள்ளதை அடுத்து இப்பகுதியிலுள்ள உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலையும், தேநீரின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாவினால் செய்யப்படும் தோசை, வாய்ப்பன் போன்றவை தேநீர் கடைகளில் அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன.

கடந்த வாரம் 10 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கப் பால்த் தேநீர் இவ்வாரம் 12 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை- யாழ்.மாவட்டத்தில் 450 கிராம் பாணின் விலை 23 ரூபாவிலிருந்து 26 ரூபாவாக கடந்த சனிக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழை மற்றும் வசதி குறைந்த மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை- இப்பிரதேசத்திலுள்ள பேக்கரிகளில் பாண்விலை உயர்த்தப்பட்டதை அடுத்து பாண் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாண் வாங்குவோர் எண்ணிக்கையும் குறைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.
(3-135)

## சாயி சிந்தனை



### கையினல் செய்பவை மாத்திரம் செயலல்ல

செயலாற்றுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் புனிதமாகவும் தூய்மையாகவும் இருக்கச் செய்யுங்கள், உங்கள் கைகளினால் செய்பவை மட்டுமே செயல்கள் என்று எண்ணாதீர்கள். காதினால் கேட்பதும், கண்ணினால் காண்பதும், நாவினால் பேசுவதும், மனதினால் எண்ணுவதும் யாவும் தூய்மையாக இருத்தல் வேண்டும். உண்ணும் உணவு மட்டுமன்றி உங்கள் ஐம்புலன்களாலும் நுகர்பவை யாவும் புனிதமாக இருத்தல் வேண்டும். அபபோது தான் சாத்வீகமான நிலை இருக்கும். பக்தி என்பது பஜனை செய்வதிலும் சுவாமியைத் தரிசிப்பதிலும் மட்டும் அடங்கியதல்ல. உங்கள் ஒவ்வொரு எண்ணமும் செயலும் பக்தி நிறைந்திருக்க வேண்டும். எல்லாச் செயல்களையும் தர்மத்தின் அடிப்படையில் தர்மத்தில் ஊறியவைகளாக செய்ய வேண்டும். தெய்வார்ப்பணமாக செய்வதே தர்மச் செயல்.
(த.ச.சா.1988 மே.ப.6)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை செல்வசோதி
(முன்னாள் முகாமையாளர், Rio Group of Co)



செல்லத்துரை செல்வசோதி (சோதி- முன்னாள் முகாமையாளர், Rio Group of Co ) அவர்கள் 20.03.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை- நாகபூரணம் தம்தியரின் அன்பு மகனும் சிந்தாதேவி (திருக்குடும்ப கன்னியர்மடம், ஆசிரியை- வசந்தி) இன் அன்புக் கணவரும் செல்வராணி (Colo.), செல்வநாதன் (மானிப்பாய்- நவாலிநாதன்) , செல்வகுமாரன் (கனடா), செல்வகுமாரி (U.S.A.), நாகலஷ்மி (U.S.A.), குகானந்தா (U.S.A.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராஜா (கொழும்பு), பத்மாவதி (மானிப்பாய்), பவாநந்தன் (U.S.A.), ஜெயந்தி (கனடா), சதாநந்தன் (U.S.A.), நிமலி (U.S.A.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மனோகரன் (U.K.), கலைவேந்தன் (ஜேர்மனி), தாமரைச்செல்வி (யாழ்ப்பாணம்), எழில்இளங்கதிர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சேவியர் சின்னையாவின் சகலனும் காலஞ்சென்ற இராசரத்தினம் குணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2006) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

859/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(48423)(39-14-16)

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி மற்றும்
உற்றார், உறவினர்,நண்பர்கள்.


கூரை அமைப்பின் புதிய அலை
அன்டன் சுப்பர் ஷெல்டா




- களம் 2.5 மி.மீ
- வேறு கூரைத்தகடுகளைவிட மலிவானது
- வெப்பம் குறைந்தது
- மழை நேரங்களில் இரைச்சலற்றது
- சுகாதார இடையூறு அற்றது
- துரு பிடிக்காதது
- 30 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- திறம் மாறாதது
- குடியிருப்பு, விவசாய, வர்த்தக, கட்டிடங்களுக்கு உகந்தது

நீடித்த பாவனைக்கு
பொருத்தும் வழிகாட்டியின்படி
பொருத்துங்கள்
இதனை விற்பனையாளரிடம்
பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்


உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துனர்
சென்ட் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ. பே: 2334361-5, 2387283-5 பெக்ஸ்: 2446534

விநியோகஸ்தர்
நாராயணா கட்டிடப் பொருள் வர்த்தகர், 95/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.



கணனி உலகில் புதியதோர் பரிணாமம்

Pc Park
partner of computer people



அதிரடி offer

யாழ் மண்ணில் முதன்முறையாக அறிமுக படுத்துகின்றோம் HYPER PATH 2 TECHNOLOGY


ASUS MOTHER BOARD
winner of 1171 distinguished intertational awards

ASUS P4V8X-MX Mother Board
ASUS P5P800-MX Mother Board
ASUS P5P800S Mother Board
ASUS P5GPL-X Mother Board
ASUS K8V-MX Mother Board(AMD)

3 Years Warranty

VGA CARD
ASUS V9400-X-64MB
ASUS Radeon 7000-64MB

குறைந்த விலை நிறைந்த தரம்
இதுவே எமது இலட்சியம்



#633,K.K.S Road, Jaffna.
Hotline :0773068998 Tel : 021-222 9581
Web : www.pcparksl.com email : info@pcparksl.com

# தங்கள் நலனுக்காக ஈரானை பகைப்பவர்கள் எதிர்காலத்தில் வருத்தப்படவேண்டி இருக்கும்

## அந்நாட்டு அதிபர் தெரிவிப்பு



தெஹ்ரான்,மார்ச் 23

அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதாக குற்றம் சுமத்தி அவமதித்து வருவதற்காக மேலை நாடுகள் ஈரானிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஈரானிடம் இருந்து சலுகைகள் பெறலாம் என்பதற்காக தவறான பிரசாரங்களை மேற்கொண்டால் எதிர்காலத்தில் அவர்கள் வருத்தப்பட நேரிடும் என்று ஈரான் அதிபர் முகமது அகமதினி ஜாத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானிய புத்தாண்டுதினம் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்தத் தினம் 'நவ்ரூஸ்' விழா என்ற பெயரில் ஈரானில் கொண்டாடப்படுவது வழக்கம். புத்தாண்டு தினத்தையொட்டி ஈரான் அதிபர் முகமது அகமதினி ஜாத் தொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நம்முடைய (ஈரான்) அணு சக்தி திட்டங்களைத் தீய எண்ணத்தில் அமைத்து இருப்பதாக மேலை நாடுகள் கூறிவருகின்றன. அது போன்ற திட்டங்கள் எதுவும் நமக்குத் தேவையில்லை. ஈரான் நாடு எப்போதும் நேர்மையின் பக்கமே நிற்கும். போர் மற்றும் குற்ற நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்பவர்கள் ஈரானைப் பார்த்து போருக்கு ஆயத்தமாகி வருவதாக குற்றஞ்சாட்டுகின்றனர். இது ஈரானை அவமதிக்கும் செயல். இதற்காக, அவர்கள் ஈரானிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

அவர்கள் தங்களது கொள்கைகளை பிரசாரம் செய்வதன் மூலமாக நிர்ப்பந்தம் ஏற்படுத்தி நம்முடைய நாட்டில் (ஈரானில்) இருந்து சில சலுகைகளைப் பெறலாம் என்று நம்புகிறார்கள்.

இதுபோன்ற தவறான கொள்கைகளை பிரசாரம் செய்வதைத் தொடர்ந்தால் கடந்த காலத்தைப் போலவே எதிர்காலத்திலும் அவர்கள் வருத்தப்பட நேரிடும். யாரிடமும் கை ஏந்தாமல் மின் உற்பத்தி போன்றவற்றில் அமைதியான அறிவுடன் கூடிய தொழில் நுட்பத்தில் நாம் உயர்ந்து நிற்கிறோம் என்று இந்த நாளில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

இவ்வாறு அதிபர் முகமது அகமதினி ஜாத் கூறினார். (ஐ)

# ஆப்கானிஸ்தானில் மதம் மாறியவருக்கு மரணதண்டனை?

லண்டன்,மார்ச் 23

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவராக மதம் மாறிய ஒருவர் மரணதண்டனையை எதிர்நோக்குவதாக வெளிவந்துள்ள தகவல்கள் குறித்து அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் கவலை தெரிவித்துள்ளன.

கிறிஸ்தவ மதத்தைத் தழுவியுள்ள அப்துல் ரஹ்மான் என்பவர் மீண்டும் இஸ்லாத்துக்குத் திரும்ப மறுப்பின் ஷாரிய சட்டப்படி மரணதண்டனைக்குள்ளாக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சங்கராபுரம் தொகுதியில் விஜயகாந்த் போட்டி?

விழுப்புரம், மார்ச் 23

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் தொகுதியில் விஜயகாந்த் போட்டியிடப் போவதாகத் தகவல் வந்ததையடுத்து இத்தொகுதியில் தேர்தல் பணிகளை தொடங்கியுள்ளனர் அக்கட்சித் தொண்டர்கள்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மதுரை மாவட்டத்திலுள்ள ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிடப்போவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாயின.

தற்போது அவர் சங்கராபுரம் தொகுதியில் போட்டியிடப் போவதாகத் தகவல் வந்துள்ளது. (ஐ)

# இந்தியாவுடனான அணு உடன்பாடு: ஆஸி. அரசுக்கு புஷ் விளக்கம்

சிட்னி,மார்ச் 23

இந்தியா - அமெரிக்கா இடையே ஏற்பட்டுள்ள அணுசக்தி உடன்பாடு குறித்து ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவார்ட்டுக்கு அமெரிக்க அதிபரே நேரடியாக விளக்கிக் கூறியிருக்கிறார். அதை ஹோவாட்டும் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்.

இதனையடுத், இதுவரை இந்தியாவின் அணுமின் நிலையங்களுக்கு யுரேனியம் விற்பனை செய்ய மறுத்துவந்த ஆஸ்திரேலியா, தனது நிலையை மாற்றிக்கொண்டு யுரேனியம் வழங்க முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த உடன்பாடு குறித்து மேலும் அறிந்துகொள்ள தனது அதிகாரிகளை இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியா விரைவில் அனுப்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# பொலீஸ் நிலையத்தைத் தாக்கி இருபது கைதிகள் விடுவிப்பு!

பக்தாத்,மார்ச் 23

ஈராக்கியத் தீவிரவாதிகள் பொலீஸ் நிலையமொன்றைத் தாக்கி, குறைந்தது 20 பேரை விடுவித்துள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் பக்தாத்துக்கு 65 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மிக்டாடியா நகரிலுள்ள பொலீஸ் நிலையத்தை சுமார் 100 பேர் கொண்ட தீவிரவாதிகள் பல்வேறு நவீன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சண்டையில் சுமார் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பொலீஸார் கூறினர். சமீபகாலத்தில் இடம்பெற்றுள்ள மிகமோசமான இரத்தக்களரியான சம்பவம் இது என்று கூறப்படுகின்றது.

சிவிலியன் வாகனங்களால் வந்த தீவிரவாதிகள் நகரின் மத்தியிலிருக்கும் அரச கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று கூறப்படுகின்றது. (ப)

# ஈராக்கில் உருவாகும் ஸ்திரமற்றநிலை அதுபற்றிப் பேசுவதற்கு ஈரான் ஆதரவு

ஈராக்கில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலைமை குறித்து அமெரிக்காவுடன் கலந்துரையாடல் இடம்பெறுவதை ஈரானிய உயர் ஆன்மீகத் தலைவர் ஆதரிப்பதாக அறிவித்துள்ளார். ஆனால், அமெரிக்கா வழமைபோல் அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதைப் பகிரங்கமாக அயத்தொல்லா கமானி ஆதரித்திருப்பது இதுவே முதற் தடவை.

ஈரானின் அணு ஆய்வுத் திட்டங்கள் குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்ப்புகள் எதையும் வழங்கினால் அதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் ஈரானிய ஆன்மீகத் தலைவர் கூறியுள்ளார். (ப)

ஆழிப்பேரலையின் போது தமிழ்நாடு திருச்செந்தூர் கரம்பவிளை கே.எஸ்.நகரைச் சேர்ந்த முருகேசன் என்பவரது வீட்டுக்கு எங்கிருந்தோ ஒரு நாய்க்குட்டி வந்தது. அதற்கு 'சுனாமி' என்று பெயரிட்டு அவர் வளர்ந்து வந்தார்.

கடந்தவாரம் இந்த நாய் ஐந்துகுட்டிகளையும் இதே வீட்டிலுள்ள ஆடு ஒன்று நான்கு குட்டிகளையும் போட்டன. இந்தக் குட்டிகள் அனைத்திற்கும் பால் கொடுப்பது 'சுனாமி' என்ற நாய்தான். இந்தக் காட்சியை திருச்செந்தூரில் உள்ள பெரும்பாலானவர்கள் வந்து பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)



# நேபாளச் சிறுவனை கண்டதாகத் தகவல்

காத்மண்டு,மார்ச் 23

நேபாளக் காட்டுப் புறத்தில் தியானத்திலிருந்த சமயம் காணாமற் போனதாகக் கூறப்பட்ட சிறுவனை மீண்டும் கண்டதாக அவனுடைய பக்தர்கள் கூறியுள்ளனர்.

நேபாளத்தின் தென்பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் ராம் பொம்ஜன் என்னும் 16 வயது சிறுவன் கடந்த 10 மாதங்களாக தியானத்தில் ஈடுபட்டுவந்துள்ளான்.

'குட்டிப் புத்தர்' எனப் பக்தர்களால் அழைக்கப்பட்டுவந்த இந்தச் சிறுவனைக் கடந்த 11ஆம் திகதி முதல் காணவில்லை என்றும் - காட்டுப் பகுதியில் சிறுவனைத் தேடி வருவதாகவும் பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

மீண்டும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரா மாவட்டத்தில் சிறுவனைக் கண்டதாக அவனுடைய பக்தர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-203)

## 150 தொகுதிகளில் புதிய தமிழகம் தனித்துப் போட்டி

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 150 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட புதிய தமிழகம் முடிவுசெய்துள்ளது.

கட்சியின் முதல் வேட்பாளர் பட்டியல் நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என அக்கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் க.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

பொதுக்குழுக் கூட்ட முடிவுகளை விளக்கி மதுரையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதைத் தெரிவித்தார். (ஐ)

# தமிழகத்தில் மேலும் புதியகட்சி திராவிட தெலுங்கு தேசம்

சென்னை,மார்ச் 23

தமிழ்நாட்டில் ஒசூரில் புதியதாக திராவிட தெலுங்கு தேசக் கட்சி உதயமாகியுள்ளது. அக்கட்சியின் தலைவராக ஜி.சி.ராமசாமியும் துணைத் தலைவராக ரவிதேஜாஸ்சும் செயலராக ராஜாரெட்டி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் வரும் பேரவைத் தேர்தலில் தமிழகத்தில் 24 தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டணியில் பங்கேற்க அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகள் அழைத்தால் அக்கூட்டணியில் இடம்பெறுவது பற்றிப் பின்னர் பரிசீலிக்கப்படும் என்றார் அக்கட்சித் தலைவர் ராமசாமி. (ஐ)

உலக அரங்கில்

# ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதாவுக்கு சொகுசு பங்களா தயாராகின்றது

## பிரசாரப் பணிகளை அங்கிருந்து தொடர்கிறார்



சென்னை,மார்ச் 23

தமிழக சட்ட சபைத் தேர்தலில் தனது சொந்தத் தொகுதியான ஆண்டிப்பட்டித் தொகுதியில் முதல்வர் ஜெயலலிதா தமது பிரசார வேலைகளை ஆரம்பிக்கவுள்ளார்.

பிரசாரப் பணிகளின்போது முதல்வர் தங்குவதற்கு வசதியாக அங்கு தனியான சொகுசு பங்களா ஒன்று தயார் செய்யப்பட்டுவருகிறது.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியில் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் போட்டியிடவுள்ளார். தொகுதியில் அவர் தேர்தல் பிரசாரம் செய்ய வசதியாக பயணத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்திற்கு தேர்தல் பிரசாரத்திற்கு வரும் முதல்வர் கடந்த தேர்தலின் போது தங்கியிருந்த பங்களாவில் மீண்டும் தங்க உள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது வேட்புமனுத் தாக்கலுக்காக வந்த போதும் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் போட்டியிட்ட போதும் முதல்வர் ஜெயலிதா இந்த பங்களாவில் தான் தங்கியிருந்தார்.

இந்த பங்களாவில் தேவையான வசதிகள் இருந்தபோதும் ஜெயலலிதா தங்குவதற்காகக் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டன.

எனவே, இம்முறையும் இதே பங்களாவில் தங்கி தேர்தல் பிரசாரத்தை முதல்வர் மேற்கொள்ளவுள்ளார். இதற்காக தற்போது இந்த பங்களாவைப் புதுப்பிக்கும் பணி நடந்து வருகிறது.

பங்களா உள்ள பகுதி பொலீஸ் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தாம்பத்ய உறவுக்கு கணவன் மறுத்தால் விவாகரத்துக் கோரலாம்

## இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

தாம்பத்திய உறவுகொள்ள மனைவி தயாராக இருந்தாலும் கணவர் அதைப் புறக்கணித்தாலோ உதாசீனப்படுத்தினாலோ தொடர்ந்து மறுத்தாலோ அருவருப்பாக நினைத்தாலோ அவசியம் இல்லை என்று கருதினாலோ மனைவி விவகாரத்துக் கோரலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

மனைவியைக் கணவன் சொல்லாலோ, செயலாலோ துன்புறுத்துவது, அவதூறாகப் பேசுவது, சித்திரவதை செய்வது என உடல் ரீதியாக ஏற்படுத்தும் விளைவுக்கு ஈடாக தாம்பத்ய உறவுக்கு மறுப்பது மனைவியின் மனதைப் பெரிதும் பாதிக்கும். கணவன் மனைவியிடையே சுமூகமான உறவு இல்லாவிட்டாலும் திருணத்துக்குப் பிறகு கருத்தரிப்பதையும் பிள்ளை பெறுவதையும் வைத்தே உற்றார் உறவினர்கள் அந்தத் திருமணத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றனர். இதிலும் மனைவியே உறவினர்களின் சொல்லடிக்கு இரையாகின்றார். இந்த நிலையில் மனைவியால் ஏற்க முடியாத காரணங்களுக்காக கணவர் தாம்பத்ய உறவுக்கு மறுத்தால் அதையே காரணம் காட்டி விவகாரத்துப் பெறலாம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பில் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கலந்துரையாடல்

வேலணை மார்ச 23

வேலணை பிரதேச செயலர் பிரிவின் புங்குடுதீவு பிரதேச மத்தியஸ்தர் சபைக்கான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு வடஇலங்கை சர்வோதயத்தில் வட இலங்கைசர்வோதய அறங்காவலர் பொ. ஜமுனாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது. (3-185)


## பணியாளர் தேவை

**யாழ்.போதனா வைத்தியசாலை X - கதிர் கூடத்தில் உதவியாளர் பணிக்கு இரு ஆண்கள் தற்காலிஹூமாகத் தேவை.**

**கல்வித்தகைமை:**

1. க.பொ.த. (சாதாரணம்) - சித்தி
2. ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்திருத்தல்
3. வயது 20 - 25இற்குள்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுயவிவரத்துடன் செயலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 01.04.2006இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

(48429)(32-15-45)

## மிலேனியம் றெஸ்ரோரன்ற்
## பணியாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு கீழே குறிக்கப்பட்டுள்ள பணியாளர் களான

1. பரிமாறுநர் (Waiter)
2. உல்லாசப் பயணிகள் விடுதி உணவு பரிமாறுபவர் (Room boy)
3. தோட்டவேலை செய்பவர்
4. சமையல் உதவியாளர்

ஆகியோர் தேவையாக உள்ளனர்.

எனவே எம்முடன் தொடர்புகொள்ள 24.03.2006 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நேரில் வந்து சந்திக்கவும். (அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

(48412)(32-15-45)

*76/60, இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

**நிர்வாகம்.**

T.P.: 021 222 2810 Cell: 077 3031680


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தேவரத்தினம் இராசையா

பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவரத்தினம் இராசையா அவர்கள் நேற்று (22-03-2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் (இளைப்பாறிய ஓவசியர் P.W.D) பாசமிகு மனைவியும் இராசேஸ்வரி (இத்தாலி), ரானேஸ்வரி (கனடா), ராஜசற்குணேஸ்வரி (இத்தாலி), தவரட்ணராஜா (வைத்தியர்) ஆகியோரின் அன்புத் தாயும் தேவதுரை (இத்தாலி), துரைசாமி (கனடா), ஜெயதுரை (இந்தாலி), பெனிற்றா கொன்சீலி ஆகியோரின் அன்பு மாமியும் அனுஷா (கனடா), நந்தினி (இத்தாலி), சாந்தினி (கனடா), நியேந்திரன் (கனடா), சசி (கனடா), அனுராதா (லண்டன்), சுபிற்றா (இத் தாலி), ஜெனிற்றா (இத்தாலி), சுயீகரன் (மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி), டனுற்றா (இத்தாலி), சசிக்கர், றதிகரன் (புனித கென்றியரசர் கல்லூரி), துஷ்யந்தன் (லண்டன்), பிரபு (கனடா), நியூட்டன் (இத்தாலி), யோய் (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும் நட்டாசா, சகானா, சோன், நிஷான், நிஷானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற அன்னரத்தினம், காலஞ்சென்ற சவுந்தரநாயகம், காலஞ்சென்ற வேதநாயகம், காலஞ்சென்ற திருமதி சவுந்தரநாயகம், காலஞ்சென்ற இராசநாயகம், காலஞ்சென்ற அரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தம்பிஜயா, இன்னாசிமுத்து, திருமதி வேதநாயகம், காலஞ்சென்ற பொன்னையா; சின்னையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.03.2006 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் இளவாலை அன்னம்மாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பத்தாவத்தை,*
*இளவாலை.* (48432)(32-15-45) **தவரட்ணராசா** (மகன்).

### சபாரட்ணம் கனகசூரியம் *(மணியண்ணன்)*
**(P.W.D Inspector)**

பருத்தித்துறை, வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவரும் தற்பொழுது கொழும்பு வத்தளையில் வசித்தவருமாகிய சபாரட்ணம் கனகசூரியம் 20.03.2006 திங்கட்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - பாக்கியம் தம்பதியரின் புதல்வனும் நவமணிதேவியின் அன்புக் கணவரும் தில்லைநாயகம் - அன்னபூரணி அம்மா (துர்க்காபுரம் தெல்லிப்பழை) தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற குமாரதேவர் செல்வராசா (லண்டன்), காலஞ்சென்ற பாலசிங்கம் மங்கயற்கரசி (கனடா), கோகிலா(கனடா), சிவகுருநாதன்(லண்டன்) ஆகியோரின் சகோதரனும் குகதாசன், பற்குணதாசன் (பிரான்ஸ்), மாவிந்திரிதேவி(கனடா), காலஞ்சென்ற கணேசதாசன் மற்றும் சிவதாசன், அருள்தாசன் (லண்டன்), உமாதேவிபாலசுப்பிரமணியம் (கொக்குவில் மேற்கு) ஆகியோரின் மைத்துனரும் அனுசா(கனடா), காலஞ்சென்ற திவாகரன், சுபிகரன்(கனடா), பிரபாகரன்(கனடா), ரசிகரன்(கனடா), சீசா (கனடா) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.03.2006 ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைத்து கனத்தை மயானத்தில் 9 மணிக்கு கிரியைகள் நடைபெற்று 10 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
*வத்தளை.* (48422)(32-15-45) **மனைவி, பிள்ளைகள்.**

## எல்லா நோய்களுக்கும்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப: இடைநிறுத்தக்கூடாது. ஏனெனில் எமது மருந்து உடனடியாக நோயைக் குணப்படுத்தாது. நோய் உருவாக முன்னர் ரிஷி மூலிகை மருந்துகளைப் பாவித்தால் நோயைத் தடுக்கலாம்.

ஆனால், நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வரும் ஒருவர் ரிஷி மூலிகை மருந்தைப் பாவிக்க ஆரம்பித்ததும் முன்னர் பாவித்த மருந்தை திடீரென இடைநிறுத்தக்கூடாது.

குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு படிப்படியாகக் குறைத்துக்கொள்ளலாம்.

கே: சந்தைப்படுத்தும் நடவடிக்கையை இலங்கையில் எவ்வாறு மேற்கொண்டு வருகின்றீர்கள்?

ப: இலங்கையில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் எங்களுடைய முகவர்கள் உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் வைத்தியர்கள். இவர்களினூடாக பல அங்கத்தவர்களை இணைத்து அவர்கள் மூலம் எமது விற்பனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்.

கே: இலங்கையில் எந்தப் பிரதேசங்களில் அதிக விற்பனை இடம்பெறுகின்றது எனக் கூறுவீர்களா?

ப: குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதியில் தான் அதிக விற்பனை இடம்பெறுகின்றது.

இலங்கையில் மொத்தமாக 13 ஆயிரம் அங்கத்தவர்கள் உள்ளனர். வடக்கு- கிழக்கில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ளார்கள்.

அங்கத்தவர்கள் மூலம் எமது மருத்துவப் பொருள்களை விற்பனை செய்வது மட்டுமன்றி அவர்களுக்கு பாரிய லாபம் ஈட்டக் கூடிய ஒரு தொழில் நடவடிக்கைகளாகவும் இதனைக் கருதலாம். ✱


## தேவை

**காரியாலயம் ஒன்றிற்கு சிற்றூழியர் தேவை. சமையல் வேலை தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.**

தொடர்பு: 021 222 2478
077 9530496
(48441)(32-15-45)

## விற்பனைக்கு

நெல்லியடி புதிய சந்தைக்கு முன்பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் கிணற்றுடன் கூடிய வீடுகட்ட, வியாபாரக் களஞ்சியம் அமைக்கப் பொருத்தமான ''பூனைதூக்கி'' என்னும் 4 பரப்புத் தோட்டக்காணியும் வரணி வைத்தியசாலைக்குப் பின்புறமாக 300 மீற்றர் தொலைவில் உள்ள 5 பரப்புத் தென்னைச் செய்கைக்கு உரிய காணியும் விற்பனைக்குண்டு.

(சி/48445)(32-15-45)

தொடர்பு:
**க.சபாநாதன்,**
'சிவகுடில்', கோவிற்சந்தை, கரவெட்டி.
T.P.: *077 3057803*

## ஊழியர் தேவை

பொருள்களைப் பொதிசெய்து விநியோகம் செய்யக்கூடிய முன்னனுபவம் வாய்ந்த ஊழியர் தேவை. திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். உறவினர் அல்லாத வர்த்தக உரிமையாளர் அல்லது கிராமசேவகரின் சிபார்சுக் கடிதம் மற்றும் சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

*சம்பளம்: நல்ல அனுபவமுள்ளவருக்கு மாதம் 7,000/- வழங்கப்படும்.*

*குறிப்பு: முன்பு சில்லறைக் கடைகளில் நிறுத்தல் வேலை செய்து பழகியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

**சிவா நறுமணப் பூங்கா,**
*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
தொ.பே.இல. *222 2567.*
(சி/48452)(32-15-45)

solidar
An INGO consortium including

## ஆங்கில ஆசிரியர் தேவை

எமது நிறுவனத்தில் உரையாடல் (Conversational) ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆங்கில ஆசிரியர் தேவைப்படுகின்றார். தகைமையும் அனுபவமும் உடையவர்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு தங்களது சுயவிவரங்களை 27.03.2006 இற்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**Mrs.S.Mohanathas,**
**Solidar INGO consortium,**
**No. 156, Jaffna Road,**
**Paranthan,**
**Kilinochchi.**
(சி/48474)(32-15-45)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




ஸ்கந்தபுரம் ஸ்ரீ முருகன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட
**பாலச்சந்திரசர்மா சர்வேஸ்வரி** தம்பதியரின்
**செல்வப் புதல்வன் மிதுர்சனன்**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (23.03.2006) வியாழக்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா, அக்கா, அன்பு பேபி தாத்தா யாழ்ப்பாணத்தில் இருக்கும் அன்பு அப்பம்மா, அத்தைமார், மாமாமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், ஸ்ரீ சித்தப்பா, ஆசைப் பூட்டியுடன் தாத்தாமார் பாட்டிமார் ஸ்ரீ முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(48430)(39-32-15-45)

செல்வன் மிதுர்சனன்

தகவல்:
**ஸ்ரீ சித்தப்பா.**


## RENT/LEASE
### JAFFNA

LUXURY HOUSE IN NGOs AREA
CLOSE PROXMITY TO MAIN STREET & JAFFNA TOWN

6 Bed rooms (wiring done for Air-condition), 4 Living & dining hall, 2 Master bathroom & 2 toilets, 3 Vehicles can park in garage and Also One Lacham (10perch) space for additional parking.
Wall Cupboards,
Kitchen with pantry fitted & party place.
Furnished OR Unfurnished Preferably NGOs

**171, 4th Cross Street, Jaffna, Sri Lanka**
(In front of World Vision staff house)

CONTACT - Mariathas
0777 624316
(Colombo)

PATKUNARAJAH
077 6628665
JAFFNA

(48433)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இளையதம்பி ஜெகதீசமூர்த்தி**
*7ஆம் வட்டாரம், புங்குடுதீவு*
*(மனோன்மணி விலாஸ் முன்னாள் உரிமையாளர்)*

*பிறப்பு 22.05.1954* *இறப்பு 02.04.2005*

அன்பான தந்தையே! அணையா ஒளிவிளக்கே!
பக்தியில் உத்தமராகவும்
அன்பில் சிகரமாகவும்
பண்பில் சிறந்தவராகவும்
அறிவில் மேன்மையானவராகவும்
கடமையில்நேர்மையானவராகவும்
பேச்சில் சிறந்தவராகவும்
மனைவிக்கேற்ற கணவராகவும்
பிள்ளைகளுக்கேற்ற தந்தையாகவும்
வாழ்ந்த எம் தெய்வத்தை ஆண்டு ஒன்று
என்ன, எம் உயிருள்ளவரையிலும் மறவோம் மறவோமே!

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி.48492) (39-32-15-45) தகவல்: **ஜெ.புஸ்பமலர்** *(புங்குடுதீவு).*


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

**765** நீலம்

கன்னி



21-03-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4159896 - 4174712

வெற்றி இலக்கங்கள் **03 16 25 28**

**ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்பட்டுள்ளது**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 80,99,720/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,25,270 | 10/- | 32,52,700/- |
| 2 இலக்கங்கள் | 29,834 | 20/- | 5,96,680/- |
| 1 இல+லக்கினம் | 29,423 | 30/- | 8,82,690/- |
| 2 இல+லக்கினம் | 2,754 | 100/- | 2,75,400/- |
| 3 இலக்கங்கள் | 810 | 500/- | 4,05,000/- |
| 3 இல+லக்கினம் | 67 | 5,000/- | 3,35,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 5 | | 70,47,470/- |
| [illegible] | | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,86,167 | | 80,99,720/- |

இந்த வெள்ளிக்கிழமை ரூபா **10,00,000/-**

| | |
|---|---|
| காலி | 4171873-6-38 |
| கண்டி | 4161849-8-28 |
| களுத்துறை | 4164459-6-93 |
| புத்தளம் | 4160663-5-28 |
| கொழும்பு | 4172589-8-05 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை



# தவக்கால இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்

இந்தியாவிலிருந்து வருகைதரும் அருட்தந்தையர்கள்

## சிறில்தாஸ், சுதாகர்

குழுவினரால் நடத்தப்படுகின்றன

- 23.03.2006 வியாழன் காலை 9 மணிமுதல் 12 மணிவரை மறை ஆசிரியர், தன்னார்வ பணியாளர்களுக்கு யாழ். மறைக்கல்வி நிலைய மண்டபம்.
- 23.03.2006 வியாழன் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம்.
- 24.03.2006 வெள்ளி முற்பகல் 10 மணிமுதல் பி.ப. 3மணிவரை பண்டத்தரிப்பு பத்திமா அன்னை ஆலயம்.
- 24.03.2006 வெள்ளி மாலை 6 மணிமுதல் 10 மணிவரை 25.03.2006 சனி மாலை 6மணிமுதல் 10 மணிவரை யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய முன்றில் (இரண்டு நாள்கள்).
- 25.03.2006 சனி முற்பகல் 10 மணிமுதல் பி.ப. ஒரு மணிவரை இளைஞர் யுவதிகளுக்கு யாழ். மரியன்னை பேராலயம்.
- 26.03.2006 ஞாயிறு காலை 9 மணிமுதல் பி.ப. 2 மணிவரை கிளிநொச்சி (கரடிப்போக்கு) திரேசாள் பாடசாலை பூநகரி.
- 26.03.2006 ஞாயிறு மாலை 6 மணிமுதல் 11 மணிவரை தாழையடி மைதானம்.
- 27.03.2006 திங்கள் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை குமுளமுனை.

(48454)
(18-12-17)

**இறை அனுபவம் பெற்று விடுதலை வாழ்வுபெற அன்புடன் அழைக்கின்றோம்.**



**இறை தியான குழுவினர். ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்.**

# காணவில்லை



12 ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்புத்துறையை வதிவிடமாகக் கொண்டவருமான

**ஆ.கிருஸ்ணபிள்ளை**
**(வேலுப்பிள்ளை)**

என்பவரைக் கடந்த இரண்டு மாத காலமாகக் காணாவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
ஆ.சுந்தரலிங்கம்,
85, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:0777 420240, 0777661655

(48445)
(18-12-17)


# PC LAND

**P III Branded Computers For Sale**

800 $MH_z$
128 MB Ram
209 B Hard Disk
Intel / Via Chip Main Board
32 MB VGA
Windows XP / Modem
with 17" Monitor / Sound Card

T. P. :- 0773151219, 0773548337

(சி-48486)(18-17-12)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## கதிரன் பத்மநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர்)

எமது பாடசாலையின் 18 வருட சேவையில் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றும் எமது சமூகத்தை மறவாது நாடிவந்த மகான் திடீர் சுகவீனம் காரணமாக காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின்ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்**
**யா/ஸ்ரீபஞ்ஞசீக வித்தியாலயம்,புத்தூர்.**

(48449)(18-12-17)

## பொருளியல்

கருத்தரங்குத் தொடர்

திரு.இ.இராஜேஸ்வரன் B.Com(Spl.), PGDE

- சனி, ஞாயிறு லீவு நாள்களில் 10 மணி
- 20 தொடர் கருத்தரங்குகள் நடைபெறும்.
- ஒவ்வொரு அலகு தொடர்பாக குறிப்புகள் வழங்கப்படும். (48446)(18-17-12)

**DMI** Stanly Road, Jaffna

## குழு புகைப்படம் எடுத்தல்

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை இறுதிவருட மாணவர்களுக்கான குழு புகைப்படப் பிடிப்பு நாளை (24.03.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வளாகத்தினுள் இடம்பெறும்.எனவே, இந்நிகழ்வில் அனைத்து வணிகத்துறை இறுதி வருட மாணவர்களும்தவறாது கலந்துகொள்ளவும்.

4 ஆம் வருட பிரதிநிதி
வணிகத்துறை.

(48455)
(18-17-12)


## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்
தங்கர் பச்சான், நவ்யா நாயர்
நடித்த
**சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி**

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மீன், கருணாஸ் நடித்த
**மெர்குறிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.00, 6.00, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

27 வரை
எம். ஜி. ஆர், ஜெயலலிதா
நடித்த
**ஒளி விளக்கு**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00


# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயஜீவி கமலானந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயஜீவி கமலானந்தன் அவர்கள் நேற்று(22.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கமலானந்தனின் (ஹற்றன் நஷனல் வங்கி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் திருமதி செல்வரெட்ணம் ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி நவராஜசிங்கம் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேம்படி வீதியில் உள்ள இல்லத்தில் இன்று(23.03.2006)வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வில்லூண்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21/13, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (48461)(18-12-17)

தகவல்:
**ந.கமலானந்தன்** (கணவர்),
**ந.தெய்வீகன்** (தம்பி).

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை சண்முகலிங்கம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சண்முகலிங்கம் 21.03.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிறீரங்கன், ராஜி, ஸ்ரீகாந்தன், சிறீரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பொன் இல்லம்',*
*தலங்காவற்பிள்ளையார் கோயிலடி,*
*அம்மன் வீதி, திருநெல்வேலி.* (48458)(18-17-12)

தகவல்:
**இராஜேஸ்வரி**
(மனைவி).

## திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி (இராசு)



தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் தலங்காவற்பிள்ளையார் கோயிலடி,திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி(இராசு) 21.03.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் இரத்தினம்-மாணிக்கத்தின் அன்பு மகளும் அமரர்கள் நாகலிங்கம் -பொன்னம்மாவின் அன்பு மருமகளும் அமரர் நவரத்தினத்தின் அன்பு மனைவியும் அமரர்கள் அபூர்வசிங்கம் ,அருந்தவநாயகி, சுகிர்தரத்தினம் மற்றும் கருணாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னபூரணம், அமரர் ஆனந்தவடிவேல், சரஸ்வதி,கந்தசாமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நகேஸ்வரி (பிரான்ஸ்),நகுலேஸ்வரி,நாகேந்திரம் (ஜேர்மனி),புஷ்பலதா (ஜேர்மனி),கணேசானந்தன்(ஜேர்மனி),கணேசலிங்கம் (சிறி-ஜேர்மனி), இராசேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் மகேஸ்வரன்(பிரான்ஸ்), றஞ்ஜனி (ஜேர்மனி), நாகராசா(ஜேர்மனி),ஜெயறஞ்ஜனி(ஜேர்மனி), அன்றியா (ஜேர்மனி),விஜிதா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சுகந்தி இல்லம்'*
*தலங்காவற்பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி.* (48460)(18-17-12)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## தில்லையம்பலம் தம்பிப்பிள்ளை



நவாலியைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (22.03.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்லாச்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற செல்லலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் மகேந்திரராசா, செல்வராணி, யோகேந்திரராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளம்பலம் ராஜேஸ்வரி, நவரட்ணம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் சுபத்திரா, வாசுகி, சுகிர்தா, துஸ்யந்தி, சுதாகரன், சுரேகா, சசிரேகா, முகுந்தன், சுகந்தன், சுகன்னியா, பிரதீபா பிரசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2006) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு, மாவத்தை வீதி, வட்டுக்கோட்டை.*
*தொ. பே.:- 0773053000* (48452)(18-17-12)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தருமரத்தினம் நிர்மலா *(கிளி)*



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி தருமரத்தினம் நிர்மலா (கிளி) 21.03.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - விஜயலக்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தருமரத்தினத்தின் அன்பு மனைவியும் கண்ணன், கஜன் (பவன்), துஷாந், தாரணி ஆகியோரின் அன்புத் தாயும் சிந்துவின் அன்பு மாமியும் சுப்பிரமணியம், சாரதாதேவி, சித்திராங்கதேவி, கனகரத்தினம், காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் குகனேசமலர் பரந்தாமன் (சிவம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருமைத்துரை, நல்லநாதன், கணேசலிங்கம் (எரிக்கணேஷ் மூக்குக்கண்ணாடியகம்), இமாவதி (பனை தெ. வ. அ. கூ. சங்கம் யாழ்.), குமரேஸ்வரி, கதிர்காமநாதன் (M.R) - பத்மராணி, நித்தியானந்தம் (சின்ராஸ்) - விக்னேஸ்வரி, செல்வராஜா - திரவியம், புவனேஸ்வரி காலஞ்சென்ற சிங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதாகரன் (கண்ணன்), மதன், சுதர்சன், சுஜீபன், ஜதுர்ஷன், அனுராஜ், அஜந்தா, பிரியங்கா, யுரேகா, துவாரகன் ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.03.2006 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். அவரது சகோதரனின் உரும்பிராய் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஒஸ்கா வீதி,*
*உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.* (48451)(18-17-12)

தகவல்:
**அ. பரந்தாமன் (சிவ**
**(சகோதரன்).**



கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்று நேற்று உருவாக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் ஆரம்பக் கூட்டத் தில் எடுக்கப்பட்ட படம் இது. ஜே.வி.பி, சுதந்திரக் கட்சி, தேசிய முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ் ஐக்கிய முன்னணி, கருணா குழு ஆகியன இணைந்து இந்த அமைப்பை உருவாக்கி உள்ளன என் அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

# பகிடிவதைக்குள்ளான மாணவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட மாணவர்கள் சிலரினால் பகிடிவதைக்குள்ளான மாணவரொருவர் பாதிப்படைந்துள்ள நிலையில் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொகவந்தலாவை 'கேர்க்கஸ் வோல்ட்' தோட்டத்தைச் சேர்ந்த பா. விஜயகாந்தன் என்ற மாணவனே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார்.

இந்த மாணவனைக் கடுமையான பகிடிவதைக்கு உள்ளாக்கிய சிரேஷ்ட மாணவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர், பொகவந்தலாவை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தக் கல்லூரிக்கு இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டுள்ள மாணவர்கள் பலர் தொடர்ந்து பகிடிவதைக்கு ஆளாகி வருகின்றனர் எனவும் - இவ்விடயம் தொடர்பாக மூடி மறைக்கப்படுகிறது எனவும் - விசனம் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## ஒட்டுப்படைகளின் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"முதற்சுற்று ஜெனீவாப் பேச்சில் இணக்கம் காணப்பட்டபடி ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றின் வன்முறைகளை ஒடுக்க அரசு தவறுமானால் அடுத்தசுற்று (2ஆம் கட்ட) பேச்சைத் தள்ளிப் போடுவது குறித்து புலிகளின் தலைமை சிந்திக்கலாம். அல்லது அந்த பேச்சில் கலந்துகொண்டு, முன்னைய பேச்சில் வலியுறுத்திய்மை போன்று ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களையும்படி திரும்பவும் வலியுறுத்துவதற்கு புலிகளின் தலைமை தீர்மானிக்கக் கூடும்" - என்றார் அவர்.

"எது எப்படியென்றாலும் ஒட்டுப்படைகளின் ஆயுதங்கள் களையப்படாமல் அமைதி முயற்சிகள் முன் நகர்த்தப்படமாட்டா என்பது நிச்சயம்" - என்றும் அவர் சொன்னார்.

"புலிகளைப் பொறுத்தவரை அரசியல் தீர்வுக்கான தீவிரப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான சூழ்நிலை முதலில் உருவாக்கப்படவேண்டும். மோதல்களைத் தணித்து, இயல்புநிலையை உருவாக்குவதன் மூலமே அச்சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். தற்போதைய பேச்சுகளின் நோக்கம் அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதே என்பதுதான் புலிகளின் கருத்து" - என்றும் அவர் சொன்னார்.

"பல தரப்பையும் இணைத்துக் கொள்ளும் திட்டம் என்ற பெயரில் ஜே.வி.பி. போன்ற பித்துப்பிடித்த மார்க்ஸிஸவாதிகளையும், ஹெலஉறுமய போன்றவற்றின் பைத்தியம் பிடித்த பிக்குகளையும் அரவணைத்துக் கொண்டு, தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரித்து, அரசியற் தீர்வு காணலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அபத்தக் கனவு காணக்கூடாது. அதைவிடுத்து பிரதான எதிர்க் கட்சியிலான ஐ.தே.கட்சியை முற்போக்குக்கான ஓர் கொள்கைக் கோட்பாட்டின் கீழ் அரவணைத்துக் கொண்டு, தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யும் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு அவர் முன்வர வேண்டும்.

"தமிழர்களின் பிராந்திய சுயாட்சிக் கோரிக்கையை ஏற்று, சாதகமாகப் பரிசீலிக்க மஹிந்த ராஜபக்ஷ இணங்காவிட்டால் எந்த அரசியற் தீர்வும் சாத்தியமே இல்லை.

"எமது உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை நிராகரிக்கப்படுமேயானால் வெளியக சுயநிர்ணய அடிப்படையில் தீர்வொன்றை நாடுவதை - அதாவது தனியான தேசமொன்றை உருவாக்குவதை - தவிர, எமக்கு வேறு வழியில்லை" - என்றார் அவர். (க-3)

## பேனா வகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நுணுக்கமான துப்பாக்கியை இராணுவ வீரரொருவர் தமக்குத் தந்தார் என கைது செய்யப்பட்டவர் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார். பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கியைப் பயன்படுத்தி ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என விசாரணைகள் நடைபெற்று வருவதாக ஹொரணப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.(க-3)

## பிரபாகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைதுசெய்து 200 வருட சிறைத்தண்டனையை அவருக்கு வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த 2002 ஆம் ஆண்டில் தீர்ப்பளித்திருந்தது.

அந்தத் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கான உத்தரவை குற்றத் தடுப்புப் பிரிவு பணிப்பாளருக்கு வழங்குமாறு கோரி கொட்டக தெனிய தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் குற்றத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர், பொலீஸ் மாஅதிபர்,சட்டமாஅதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (க-3)


## மரண அறிவித்தல்



### கந்தசாமி சிவம்
(லாண்ட் மாஸ்ரர் சிவம்)

சுன்னாகம் மேற்கைப் பிறப்பிடமாகவும் பழனி யாண்டவர் வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவம் அவர்கள் நேற்று (22.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டா வில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழனி முருகன் ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில். (48462)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



NEW SCIENCE COLLEGE
புலங்கள்
By. கருணாநிதி
Sat. Sun.
3.00 - 4.00 (SLT)
ஆரம்பம்:
25.03.2006


## உரும்பிராயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருவர் படுகாயமடைந்தார்.

ஈச்சமோட்டையைச் சொந்த இடமாகவும் தற்போது உரும்பிராயில் வசித்துவந்தவருமாகிய தபாலக சிற்றூழியராகக் கடமையாற்றும் நான்குபிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் செல்வரத்தினம் (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த ம.லோகேஸ்வர பிரசாத் (வயது 28) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராயிலிருந்து கோண்டாவிலை நோக்கி ஒரு மோட்டார் சைக்கிளில் மூவர் பயணம் செய்துகொண்டிருந்தனர் எனவும் -

அப்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிக்கொண்டனர் என்றும், அதில் பயணித்தவர் அந்த இடத்தில் உயிரிழந்தார் எனவும் கூறப்படுகிறது.

இதில் மூன்று பேருடன் பயணம் செய்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இளைஞனே தலையில் படுகாயமடைந்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இறந்தவரின் சடலத்தை நேற்றிரவு பார்வையிட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(3-13-15-78-49)

## பரு. கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் அது காணப்படவில்லை. இது சந்தேகத்தை மேலும் எழுப்பியது. படகில் ஐந்துபேர் காணப்பட்டனர். ஐவரும் தமிழர்களாவர். இதில் நால்வர் திருமலைப்பகுதியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மட்டும் இரணைத்தீவைச் சேர்ந்தவர்.

படகையும் அதிலிருந்தவர்களையும் காங்கேசன்துறை துறைமுகப்பகுதிக்கு போகுமாறு கோரப்பட்டது. அவர்கள் பின்னடித்தனர். படகின் எஞ்சினை வேண்டுமென்றே பழுதுபார்ப்பது போல பாசாங்கு செய்தனர். இது இந்த படகு மீதான சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தியது.

இதேநேரம் படகிலிருந்து இவர்கள் கடலுக்குள் சில பொருள்களை வீசுவதை கடற்படையினர் கண்டிருக்கிறார்கள். தொலைத்தொடர்புச் சாதனங்கள், கையடக்கத் தொலைபேசிகளாக இவை இருக்கலாம் என நம்பப்படுகின்றது. படகு காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டன.

படகுக்குள் ஜெலிக்னைட் பொதிகள் இரண்டும், ஒலி சமிக்ஞை கருவியும் காணப்பட்டன. இந்த ஐவர்களில் ஒருவர் தான் விடுதலைப் புலி உறுப்பினர் என ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக புலிகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப் பட்டது.

அதேவேளை - இந்தப் படகில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அல்லர் என அதன் ஊடகத்துறை நேற்றிரவு தெரிவித்தது. (க-3)

## அரச பகுதிகளுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாம் இந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகள் சில வருமாறு:-

✱ புலிகளின் அரசியல் அலுவலகங்களில் புலிக்கொடி ஏற்றக்கூடாது.

✱ பொது நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றக் கூடாது.

✱ அரசியல் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் பாடசாலை மாணவர்களைச் சேர்க்கக் கூடாது.

✱ அரசுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் எதிரான ஆர்ப்பாட்டங்களில் பொதுமக்களை ஈடுபடுத்தக் கூடாது.

✱ ஒவ்வொரு போராளியும் எந்தெந்தப் பகுதியில் பணியாற்றுவார் என்பது பற்றிய விவரம் முதலிலேயே எழுத்தில் தரப்பட வேண்டும்.

✱ அரசியற் போராளிகள் எந்த நாள்களில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகிறார்கள், எவ்வளவு நாள் அங்கு தங்கியிருப்பார்கள், எப்போது திரும்புவார்கள் என்ற விடயங்கள் எழுத்தில் முற்கூட்டியே தெரியப்படுத்தப்பட வேண்டும்.

✱ அரசியற் பணிக்கு வரும் போராளிகள் விசேட அடையாள அட்டை பெறவேண்டும்.

✱ பாடசாலைகளில் அரசியல் பிரசாரம் செய்யக் கூடாது.

✱ வயது குறைந்தோரை (சிறுவர்களை) படைக்குச் சேர்க்கக் கூடாது.

✱ பொதுமக்களிடம் அச்சுறுத்தி நிதி சேகரிக்கக் கூடாது.

✱ ஏனைய அரசியற் கட்சிகள் இடையூறின்றி சமத்துவமாகத் தமது அரசியற் பணிகளைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். அவற்றை அச்சுறுத்தக் கூடாது.

✱ காவல்துறை (பொலீஸ்) நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடக்கூடாது.

✱ இராணுவச் சீருடைகள், இராணுவ இடுப்புப் பட்டிகள் (பெல்ட்) போன்றவற்றைப் போராளிகள் அணி யக்கூடாது.-என்பன அந் நிபந்தனைக ளில் சில வாகும். (க-3)

## குடத்தனையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்துப் படையினர் அங்கு குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

மணல் ஏற்றவந்த வாகனங்கள் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுச் சோதனை செய்யப்பட்டன.

அந்த வாகனங்களின் சாரதிகள், நடத்துநர்கள், தொழிலாளர்கள் என 50பேர் படையினரால் நேற்று மாலைவரை தடுத்து வைக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர்.

(3-70-78-173)


AIMS
Linux
புதிய பிரிவுகள் ஆரம்பம் 26.03.2006



Diploma in Internet & E-Mail
Speed Batch Only 10 Hours
Start on - 25-03-2006
Days :- Sat, Sun
Time :- 4.00 p.m
Only For 10 Students
Fees :- 1000/=
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.


## படைத்தரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விப்பதாகும்.

"இந்த நிபந்தனைகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது போராளிகளின் அரசியற் பணிகளுக்கு நிரந்தரத் தடையை விதிப்பனவாக உள்ளன. இதன் விளைவு பாதகமான பல அம்சங்களை ஏற்படுத்தும்.

"இந்த நிபந்தனைகளை விதித்து அரசியல் தீர்வுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டிருக்கின்றது இலங்கை இராணுவம்.

"யுத்த நிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுகளையும், ஜெனீவாப் பேச்சுக்களின் இணக்கப்பாட்டு அம்சங்களையும் நடைமுறைப்படுத்த விடாமல் இவ்வாறு இடைஞ்சல் செய்வதன் மூலம் விபரீதமான விளைவுகளுக்கு அரச படைத் தரப்பு கால்கோள் இடுவதாகவே கொள்ளவேண்டும். நான் அப்படித்தான் கருதுகிறேன்." - என்றார் மதியுரைஞர் பால சிங்கம். (க-3)




EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 02


# மாதிரி வினாப்பத்திரம்

## உயிரியல் 1

1 மணித்தியாலம்


Mr.R. Easvarathasan (B.Sc. (Cey). Dip.In Edu. M.Ed.

1. பின்ருவனவற்றில் எதில் கந்தகம் ஒரு மூலகமாக அடங்கியுள்ளது எனக் கருதலாம்?
(1)RNA (2)மாப்பொருள் (3) பச்சையுருவம் (4) புரதம் (5) செலுலோசு
2. பின்வரும் கலப்புன்னங்கம் - தொழில் சோடிகளில் பிழையானது எது?
கலப்புன்னங்கம் தொழில்
(1) கரு - கலத்தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்
(2) இழைமணி - ATP தொகுப்பு
(3) பச்சையவுருமணி - மாப்பொருள் தொகுப்பு
(4) அழுத்தமற்ற அகக்கலவுருச்சிறுவலை - ஸ்டீரொயிட் தொகுப்பு
(5) இலைசோசோம் - பழைய கலக்கூறுகளை அழித்தல்
3. விலங்குக்கலம் ஒன்றில் காற்றிற் சுவாசத்தின்போது கிரப்பின் வட்டத் தாக்கத்தில் உருவான தாழ்த்தப்பட்ட துணைநொதியங்கள், சுவாச இலத்திரன் கொண்டு செல்லல சங்கிலியினூடாகக் கொண்டு செல்லப்படுகையில் குளுக்கோசின் ஒரு மூலக்கூறிற்குத் தொகுக்கப்படும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை
(1) 8 (2) 18 (3) 22 (4) 34 (5) 38
4. குழியவன்கூட்டின் தொழில் அல்லாதது எது?
(1) பதார்த்தங்களைக் கொண்டு செல்லல்
(2) புன்னங்கங்களை ஒழுங்குபடுத்தல்
(3) கலத்தின் வடிவத்தைப் பேணல் (4) கல அசைவிற்கு உதவுதல்
(5) கலத்தினுள் புன்னங்கங்களைக் கொண்டு செல்லல்
5. பச்சையவுரு மணியானது புரோகரியோட்டாவை ஒத்திருப்பது
(1) தடவடிவ DNA ஐக் கொண்டிருப்பதால்
(2) மாப்பொருளைக் கொண்டிருப்பதால்
(3) மணியுரு, பஞ்சணை என்ற அமைப்பைக் கொண்டிருப்பதால்
(4) சுயாதீனமாக அசையக்கூடியதாக இருப்பதால்
(5) தட்டையான வடிவம் உடையதாக இருப்பதால்
6. ATP
(1) ATP யில் ஒரு உயர் சக்திப் பொஸ்பேற் பிணைப்புகள் உள்ளன.
(2) தாவர நொதித்தலைவிட விலங்கு இலற்றிக்கமில நொத்தலில் அதிகATP உருவாகும்.
(3) ATP ஒரு நிவிக்கிளிக்கமிலமாகும்.
(4) ATPயில் ரைபோஸ் வெல்லமுண்டு
(5) ATP யில் தைமீன் உப்புமூலம் காணப்படும்.
7. பின்வரும் சேர்மானங்களில் தவறானது எது?
(1) ஆபத்துக்குள்ளாகும் இனம் - IUCN செந்தரவுப்புத்தகத்தில் இடம்பெறும.
(2) வாழும்உயிர்ச்சுவட்டுஇனம் மிகச் சிறிய மாற்றத்துடன் புவியில் நீண்டகாலம் வாழ்கிறது.
(3) உள்நாட்டு இனம் - குறித்த ஒரு நாட்டுக்குரிய இனம்
(4) EW - ஒரு பிரதேசத்தில் காப்பு செய்யவேண்டிய இனம்
(5) Flagship இனம்- ஒரு நாட்டின் கலாச்சாரத்தின் அடையாளப் பெறுமதியுள்ள இனம்
8. பின்வரும் அங்கி - இலிங்கமில் முறை, இனப்பெருக்கம் ஆகியவற்றின் சேர்மானங்களில் தவறானது எது?
(1) அகாரிக்கசு - சிற்றடிவித்தி உருவாக்கம்
(2) ஸ்பைரோகைரா - துண்டு துண்டாதல்
(3) மதுவம் - அரும்புதல்
(4) ஐதரா - அரும்புதல்
(5) பிளனெரியான் - துண்டு துண்டாதல்
9. நகருயிர்களின் தரைவாழ்விற்கான இசைவாக்கமெனக் கருத முடியாதது பின்வருவனவற்றுள் எது?
(1) உள்ளடக்கப்பட்ட சுவாசப் பரப்புகளுடைய நுரையீரல்கள் காணப்படல்.
(2) இருசோடி ஐவிரலவயவங்கள் காணப்படல்.
(3) நைதரசன் கழிவாக விரிக்கமிலம் கழித்தல்.
(4) சுரப்பிகளுடைய தோல் காணப்படல்
(5) முளைய மென்சவ்வுகள் விருத்தியடைதல்
10. Class Aves பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் பிழையானது எது?
(1) முள்ளந்தண்டு விலங்கு வகையில் இவை மட்டும் முளைய மென்சவ்வுகள் காணப்படும்.
(2) அவற்றில் செதில்கள், இறக்கைகள் ஆகியவை இரண்டும் காணப்படும்.
(3) அவற்றின் தாடைகளில் பற்கள் இல்லை.
(4) அவற்றின் என்புகளிற் பெரும்பலானவை உட்குழிவானவை.
(5) சிறகின் மேற்பரப்பு விசேடமான ஓர் இயற்கை வரிசையினால் ஆக்கப்படும்.
11. ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகக் கூடுதலாக இனங்களைக் கொண்டுள்ள அங்கியானது
(1) ஊர்வன (2) பாலூட்டி (3) அம்பிபியா (4) பறவை
(5) தீக்கும் தாவரங்கள்
12. $C_4$ தாரவங்கள் தொடர்பாகத் தவறான கூற்று பின்வருவனவற்றுள் எது?
(1) கலன்கட்டுகள் தடிப்படைந்த கலச்சுவர்களைக் கொண்ட புடைக்கல விழையக் கலங்களால் சூழப்பட்டிருக்கின்றன.
(2) இருவகையான பச்சையவுருமணிகள் காணப்படுகின்றன.
(3) பொஸ்போ கிளிசமிக்கமிலத்தின் தாழ்த்தலில் Rubpcarboxylase நொதியம் பங்குகொள்கிறது.
(4) காபனீரொட்சைட் முதலில் பொஸ்போ ஈனோல் பைரூவிக்கமிலத்தினால் பதிக்கப்படுகின்றது.
(5) காபனீரொட்சைட் ஈடுசெய்நிலையின் பெறுமானம் மிகக்குறைவானது.
13. A, B, C ஆகிய நிலைகளைக் குறிப்பது
(1) பிரிவிலி முதல் வித்தித் தாய்கலம், மூளையம் வித்தி
(2) வித்தித்தாய்க்கலம், பிரிவிலி முதல், முளையம்
(3) முளையம், பிரிவிலி முதல், வித்தித் தாய்க்கலம்.
(4) பிரிவிலி முதல், முளையம், வித்தித் தாய்க்கலம் விந்துபபோலிமுட்டை
(5) பிரிவிலி முதல், வித்திக் கலன், வித்தி




14. p, q, r எனும் செயல்முறைகள் குறிப்பது
(1) இழையருப் பிரிவு, ஓடுங்கல் பிரிவு, கருக்கட்டல் வித்தித்தாவரம்
(2) கருக்கட்டல், ஒடுங்கல் பிரிவு, இழையுருப் பிரிவு
(3) ஒடுங்கல் பிரிவு, கருக்கட்டல், இழையுருப் பிரிவு
(4) கருக்கட்டல்இழையுருப்பிரிவு,ஒடுங்கல்பிரிவு
(5) ஒடுங்கல் பிரிவு, இழையுருப்பிரிவு, கருக்கட்டல்
15. ஒட்சின் எனும் ஓமோனின் தொழிலாவது
(1) வித்துக்களின் உறங்கு நிலையை நீக்கும்
(2)அரும்புகளின் உறங்குநிலையை நீக்கும்.
(3) கணுவிடை நீளத்தை அதிகரிக்கின்றது.
(4) உச்சியாட்சியை நீக்குகின்றது.
(5) கலனிழைய வியத்தை தூண்டுகின்றது.

16 தொடக்கம் 17 வரை வினாக்கள் பின்வரும் வரைபுகளை அடிப்படையாக கொண்டவை.





கிருமியழிக்கப்பட்ட 5% சுக்குரோசுக் கரைசல் ஒன்றின் 1000 மில்லி லீற்றரானது மதுவ வளர்ப்புக் கரைசலொன்றில் சில துளிகள் மூலம் குருதி புகுத்தப்பட்டு 30°C இல் 24 மணிநேரம் வரை கிருமி பெருக விடப்பட்டது. இந்நேரத்துள் குறிப்பிட்ட நேர இடைகளுள் மேற்குறிப்பிட்ட கிருமி புகுத்தப்பட்ட சுக்குரோசுக் கரைசலின் 0.01 மில்லி லீற்றர் வீதம் பெறப்பட்டது. இவ்வாறாக பெறப்பட்ட ஒவ்வொரு தற்கூறிலும் (மாதிரியிலும்) அடங்கியுள்ள மதுவக் கலங்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டது.

16. X அச்சை நேரம் எனவும் Y அச்சை மாதிரியில் காணப்படும் மதுவக் கலங்களின் எண்ணிக்கை எனவும் கொண்டால் மேற்படி பரிசோதனையின் பெறுபேறுகள் மேற்படி வரைபுகளுள் எதன் மூலம் சிறப்பாக காட்டப்படுகிறது?
17. ஓ அச்சை ஆதாரப்படையின் செறிவு எனவும் லு அச்சை தாக்க வீதம் எனவும் கருதினால் ஆதாரப்படையின் செறிவுக்கும் நொதியத்தாக்கத்தின் வீதத்திற்கும் இடையிலான தொடர்பை மிக சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்தும் வரைபு எது?
18. இரசணை அசைவு பற்றிய சரியான கூற்று எது?
(1) இவ்வசைவு வளர்ச்சி அசைவாகும்.
(2) இவ்வசைவு அங்கியின் குறிப்பிட்ட பகுதி மட்டும் அசையும்.
(3) தூண்டலுக்கு தூண்டல்பேறு தூண்டலை நோக்கி மட்டும் நிகழும்.
(4) ஒரு கல அங்கிகளில் இவ்வசைவு காட்டப்படும்.
(5) உயர் தாவரங்களில் காண்பிக்கப்படும்.
19. தாவரங்களில் இலைவாய் திறந்து மூடுதல் சம்பந்தப்பட்ட நொதியம் பின்வருவனவற்றில் எதுவாகும்?
(1) Cytocrome oxidase (2) PEP Carboxlase (3) Pyruvic kinase
(4) a - amylase (5) Lipase
20. Poganatum இன் வாழ்க்கை வட்டத்தில் பின்வரும் சிறப்பியல்பு எது இருப்பதில்லை?
(1) ஆட்சியுடைய புணரித்தாவரச் சந்ததி
(2) வித்தி உருவாகும் போது ஒடுக்கற்பிரிவு நிகழும்
(3) நுண்வித்தி, மாவித்தி விருத்தியடைதல்
(4) வித்தித்தாவரம் புணரித்தாவரத்தில் தங்கியிருத்தல்
(5) திட்டமான சந்ததிப் பரிவிருத்தி காணப்படல்
21. பின்வருவனவற்றுள் எது வரணிலைத் தாவரங்கள் கொண்ட ஆவியுயிர்ப்பு வீதத்தைக் குறைப்பதற்கான இசைவாக்கம் அல்ல?
(1) மெழுகுத் தன்மையான புறத்தோல் காணப்படல்.
(2) இலைமுட்கள் காணப்படல்
(3) குழிக்கல் காணப்படல்
(4) இலைவாய்கள் குழிகளில் காணப்படல்
(5) இலைகள் சுருளடைதல்
22. இலைகளில் வெண்பச்சை நோய் தோன்றுவதற்கு எம் மூலகத்தின் குறைபாடு காரணமாகும்
(1) Ca (2) N (3) Na (4) Mo (5) H
23. புகையிலை புகைத்தலினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?
(1) சிகரெட் புகைத்தல் கெண்டிக்கலங்களால் சீதம் சுரக்கப்படுதலைத் தூண்டுகிறது.
(2) இதன் விளைவாகச் சுவாசச் சிறுகுழாய்களில் அழற்சி (Bronchitis) ஏற்படுகின்றது.
(3) புகையிலைப் புகையில் காணப்படும் காபனோரொட்சைட்டால் குருதியினால் ஒட்சிசன் கடத்தல் பாதிக்கப்படும்.
(4) நீண்டகால சிகரெட் புகைத்தல் புற்றுநோய் தோற்றுவதற்கு ஏதுவாக அமையலாம.
(5) புகையிலைப் புகையில் காணப்படும் நிக்கோட்டின் இதயத்துடிப்புவீதத்தைத் தற்காலிகமாக் குறைக்கின்றது.

*வினாக்கள் 24, 25யும் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. முதலி நிரலில் ஓமோன் மூன்று தரப்பட்டுள்ளது. இரண்டாவது நிரலில் அவை உற்பத்தியாகும் இடம். மூன்றாவது நிரலில் அதன் தொழிற்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.*


| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| ஓமோன் | உற்பத்தி | முக்கிய தொழிற்பாடு |
| A=ஒட்சிரோசின் | L- முன்கபச்சுரப்பி சோணை | P-கருப்பைத் தசைச் சுருக்கம் |
| B=டுர் | M-பரிவகக்கீழ் | Q-கல்சியத்தைக் குறைத்தல் |
| C=கல்சிரோனின் | N-தைரோயிட் சுரப்பி | R-சூலிடல் |

24. ஓமோன்கள் A, B, C என்பன உற்பத்தியாகும் பிரதான இடங்களை சரியான் ஒழுங்கில் காட்டுவது பின்வருவனவற்றில் எது?
(1) L, M, N (2) N, M, L (3) M, N, L (4) M, L, N (5) L,N, M
25. ஓமோன்கள் A, B, C முக்கிய தொழிற்பாட்டைக் காட்டும் ஒழுங்கு பின்வருவனவற்றில் எது?
(1) P, Q, R (2) P, R, Q (3) R, Q, P (4) R, P, Q (5) Q, P, R
26. மனித வன்கூட்டுத்தசை தொடர்பான சரியான கூற்று
(1) இதனைச்சூழ திட்டமான தசை நாருறை காணப்படுவதில்லை
(2) இதனுள் மத்திய பகுதியில் அமைந்த கரு காணப்படும்.
(3) மனிதனிலுள்ள இதயத்தசையுடன் பல ஓப்புமை காட்டும்.
(4) இடைப்புகுந்த வட்டத்தட்டு காணப்படும்.
(5) குறுக்கு இணைப்பால் வலையமைப்பைக் கொண்டவை.
27. மனிதனுடைய குருதிச்சுற்றோட்டத்தொகுதியின் ஒரு பகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது.
a, b, c ஆக அமையக்கூடியது
(1) ஈரல் நாடி, ஈரல்வாயினாளம், ஈரல் நாளம்
(2) ஈரல்வாயினாளம், ஈரல் நாடி, ஈரல் நாளம்
(3) ஈரல் நாளம், ஈரல்வாயினாளம், ஈரல் நாடி
(4) ஈரல் நாளம், ஈரல் நாடி, ஈரல்வாயினாளம்
(5) ஈரல் நாடி, ஈரல் நாளம், ஈரல்வாயினாளம்



28. மானிடக் கண்ணின் கோல்கள்
(1) மையச் சிற்றிறக்கத்தின் இருக்கின்றன.
(2) ஒளிக்கு உயர்ந்த அளவில்உணர்ச்சியுள்ளவை.
(3) உயர் பார்வைக் கூர்மையை உடையவை
(4) நிறப் பார்வையுடன் சம்பந்தப்பட்டவை.
(5) கூம்புகளிலும் பார்க்க எண்ணிக்கையில் குறைந்தவை

29. ஆகிய வினாவில் கீழே தரப்பட்ட வரையிகளை அடிப்படையாகக் கொண்டன.



மானிடப் பெண்ணின் மாதவிடாயச் சக்கரத்தில் சம்பந்தப்பட்ட ஓமோன்களின் குருதி மட்டத்தை வரைபுகள் காண்பிக்கின்றன. (குருதிமட்ட அளவுகள் எல்லா ஓமோன்களுக்கும் ஒரே அளவுத்திட்டத்தில் வரையப்படவில்லை என்பதைக் கவனிக்க)

29. A, B, ஆகிய வரைபுகள் குறிப்பது முறையே
(1) ஈஸ்ரஜின் LH, (2) ஈஸ்ரஜின் FSH, (3) LH, FSH,
(4) ஈஸ்ரஜின், புரோஜெஸ்ரோன், (5) புரோஜெஸ்ரோன், LH,

30. குழந்தைப் பிறப்பின் போது குழந்தையில் உடலின்தொகுதிகளின் செயற்பாடுகளின் சடுதியான மாற்றங்கள் ஏற்படும். இவ் மாற்றங்களுடன் தொடர்புடைய பிழையான கூற்று யாது?
(1) தாயின் குருதி விநியோகத்தில் இருந்து குழந்தைக்குரிய குருதி விநியோகம் நிகழ்த்தப்படும்.
(2) நுரையீரலில் நிரம்பிக் காணப்படும் அமினியன் பாய்பொருள் அகத்துறிஞ்சபபடும்.
(3) வலது - இடது சோணைகளுக்கிடையே காணப்படும் நீள்வளையக் குடையம் மூடப்படும.
(4) நீள்வளைய மையவிழையத்துக்குரிய சுவாச மையம் தூண்டப்படும் முதல் மூச்சு இழுக்கப்படும்.
(5) இதயத் தொழிற்பாட்டில் இதயவடிப்புஆரம்பம் கண்டுபிடிப்பு கூடியதாக இருக்கும்.

31. ஜீன் தொழில்நுட்பம் (Gene Technology) தொடர்பான கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளில் பொருத்தமற்றது எது?
(1) DNA Probes - தனித்துவ DNA மூலக்கூறு இனங்காணல்
(2) DNA finger print - தனியாள் இனங்காண உதவும்.
(3) Genetic Engineering -நோயற்ற Gene தோன்றலாம்
(4) Restriction Enzyme - Genome இணைக்க உதவும்
(5) Gene Technology - Genome(பிறப்புரிமை தொகுதி) கையாளப்படும்

32. பல்பரம்பரையலகுத் தலைமுறையுரிமை அல்லாதது?
(1) ABO குருதிக்கூட்டம் நிர்ணயம் (2) மனித உயரம் நிர்ணயம்
(3) பசுக்கள் வழங்கும் பாலின் அளவு
(4) மனிதனின் தோலின் நிறத் தீர்மானம்
(5) விவசாய பயிர்களின் உற்பத்தி

33. ஒரு நிறமூர்த்தத்தில் P, Q, R, S ஆகிய நான்கு பரம்பரையலகுகள் உண்டு. பல்வேறு கலப்புப் பிறப்பு பரிசோதனைகள் மூலம் பின்வரும் மீளச்சேர்தல் சதவீதங்கள் பெறப்பட்டன.
P - Q = 24% R - P = 14%
R - S = 8% S - P = 6%
Q - R = 10%
மேற்படி நிறமூர்த்தத்தில் நாள்கு பரம்பரை அலகுகளும் காணப்படக்கூடிய ஒழுங்குமுறை பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) SPRQ (2) SPQR (3) QRSP (4) RSPQ (5) RPSQ

34. பின்வரும் எந்த மண்டலத்தில் ஓசோன் படை காணப்படும்?
(1) மாறல் மண்டலம் (2) படை மண்டலம் (3) இடை மண்டலம்
(4) வெப்ப மண்டலம் (5) அயனமண்டலம்

35. அயனமணடல மழைக்காடுகளின் மண்களில் கனிப்பொருட்போசணைப் பொருட்கள் அளவு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதன் காரணம்
(1) தாவரதெமைமடட அடர்த்தி உயர்வானதால்
(2) மண்ணிலுள்ள உயர்வெப்பநிலை போசணைப்பொருட்களைத் தரங்குன்றச் செய்தலால்.
(3) அயனமண்டல மண்களில் நுண்ணங்கிகள் ஏராளமாக இருப்பதில்லையாதலால்.
(4) மண்ணிலுள்ள சேதனப் பொருட்களின் பிரிந்தழிதலும், தாவரங்களினால் கனிப்பொருட்கள் மீளத்தன்மயமாக்கலும் மிகத் துரிதமாக நடைபெறுதலால்.
(5) அயனமண்டல மண்களில் கனிப்பொருள் வட்டமாக சுழல் ஒப்பீட்டளவில் குறைந்த வேகத்திலேயே நடைபெறுவதால்.

36. விவசாய சூழற்தொகுதி ஒன்று அயன ஈரக்காடு ஒன்றில் இருந்து வேறுபடுவதற்கான காரணம் விவசாய சூழற்தொகுதியானது?
(1) அங்கி இனங்களின் மிக உயர் பலவகைமையை காட்டுகின்றமையாகும்.
(2) மிக இலகுவாக நோய்ப்பீடைத் தாக்கத்திற்கு உள்ளாகின்றமையாகும்.
(3) மண் போசணைகளை மிகச் சிறப்பாக பாதுகாத்துக்கொள்கின்றமையாகும்.
(4) மண்ணரிப்புக்கு உட்படும் தன்மையைக் குறைவாக கொண்டிருக்கின்றமையாகும்.
(5) சுற்றாடலுக்கு மிக சிறப்பாக இசைவாக்கமடைந்த அங்கிகளை கொண்டுள்ளமையாகும்.

37. "காப்பு" தொடர்பாக முக்கியத்துவம் குறைந்த கூற்றைத்தெரிவு செய்க.
(1) பிறப்புரிமையியல் பல்வகைமையைப் பேண உதவும்.
(2) தற்கால வளங்களைப் பாதுகாத்தல்
(3) உயிரின மண்டல தாவர விலங்குகளைப் பாதுகாத்தல்.
(4) உயிரின மண்டல விலங்குகளை மாத்திரம் பாதுகாத்தல்
(5) அதிக நன்மையைப் பெற்று நிலைத்து நிற்க உதவும்

38. ஒரு போசணை மட்டத்திலிருந்து அடுத்த போசணை மட்டத்திற்கு செல்லும்போது 90மூ சக்தி இழப்பு ஏற்படுகின்றது. இதற்கான காரணமாக பின்வருவனவற்றுள் எதனை ஏற்றுக்கொள்ள முடியாது?
(1) சுவாசம் (2) கழித்தல் (3) இறப்பு (4) பிரிந்தழில்(5)தொகுப்பு

39. நைதரசன் வட்டம் தொடர்பாக பின்வரும் எக்கூற்று பொருத்தமற்றது
(1) இயற்கையாக நைதரசன் பதித்தலில் பற்றீரியா பங்கெடுக்கும்.
(2) கைத்தொழில் முறையினால் நைதரசன் பதித்தல் இன்று பெருமளவு நடைபெறுகின்றது.
(3) மண்ணில் உள்ள நைத்திரேற்று தாவரங்களால் தன்மயமாக்கப்படுகின்றது.
(4) பற்றீரியாக்களில் வளிமண்டலத்திற்கு நைதரசன் விடுவிக்கப்படும்.
(5) நைத்திரட்டாக்கத்தில் பங்கசுக்கள் பங்குகொள்கின்றன.

*40, 41 ஆகிய வினாக்கள் நுண்ணங்கிகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கீழே தரப்பட்ட முறைகளை / சாதனங்களை அடிப்படையாகக் கொண்டன.*
(1) அமுக்கவடுகலன் (2) கனலி (3)நேரடிச்சுவாலை
(4) வடிகட்டல் (5) வீசுகதிர்வீழல்

40 வெப்ப்மாறுநிலையான பதார்த்தத்தைக் கொண்ட வளர்ப்பு ஊடகத்தைக் கிருமியழிக்கப் பயன்படுத்தப்படும் முறை / சாதனம் மேற்காண்பவற்றுள் எது?

41 சத்திர சிகிச்சைக்கு உபயோகிக்கும் உபகரணங்களிலிருந்து நுண்ணங்கிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் முறை / சாதனம் மேற்காண்பவற்றுள் எது?

42. யானைக்கால் நோய் பற்றிய திருத்தமான கூற்றைத் தெரிந்தெடுக்க
(1) அது *Anopheles culicifacies* இனால் பரப்பப்படுகின்றது.
(2) காரண அங்கியின் தொற்று நிலை $L_1$ குடம்பியாகும்.
(3) காரண அங்க காவி தேங்கும் துப்பரவில்லாத நீரிலே முட்டைகளை இடுகின்றது.
(4) யானைக்கால் நோயினால் நிறைவுடலி மானிடர்களே பாதிக்கப்படுகின்றனர்.
(5) யானைக்கால் நோயின் ஒரே முன் அறிகுறி தோலில் செம்பொருட்கள் விருத்தியாகின்றமையாகும்.

43. இலங்கையில் கொளுக்கிப்புழு நோய் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் இருந்து திருத்தமற்றதை தெரிந்தெடுக்க.
(1) *Ascaris lumbricoides* இனால் இந்நோய் விளைவிக்கப்படுகின்றது.
(2) காரண கித்தாவின் நிறைவுடலி பிரதானமாக மனிதனின் முன்சிறுகுடலில் உள்ளது.
(3) ஒட்டுண்ணியின் தொற்றுநிலை வழக்கமாக மழை நீரினால் பரம்பலடைகின்றது.
(4) கருநிற மலத்தை வெளியேற்றல் இந்நோயின் ஓர் அறிகுறியாகும்.
(5) மலசல கூட வசதிகள் குறைவாக இருக்கும் பிரதேசங்களில் இந்நோய் அதிக அளவில்காணப்படுகின்றது.

44. நெல் உறைப்புழுவினால் தாக்கப்பட்ட நெல் வயல் ஒன்றில் அவதானிக்கப்படும் சேதத்தின் ஓர் அறிகுறி
(1) வெண்நிறக்கதிர்கள் இருக்கின்றமை 2) நெற்தாவரங்கள் வாடுதல்
(3) நீர் மட்டத்திற்கு மேலே சில தாவரப்பகுதிகள் இல்லாமை
(4) மரித்த இதயங்கள் இருக்கின்றமை.
(5) நெற்தாவரத்தின் இலைகளின் மீது வெண் அல்லது கபில பொட்டுக்கள் இருக்கின்றமை.

45. மீன்வளர்ப்பு முறை பற்றிய பொருத்தமான கூற்று
(1) பல்லின வளர்ப்பில் ஒரு பழக்கமுள்ள மீன்கள் தேர்ந்தெடுக்கப்படும்.
(2) விரிவாக வளர்ப்பில் நீர் விரைவாக மாற்றமடையும்.
(3) ஓரின வளர்ப்பில் உணவுப்போட்டி ஏற்படும்.
(4) செறிவான வளர்ப்பில் இயற்கை உணவு சீராகப் பங்கிடப்படும்.
(5) செயற்கை வளர்ப்பில் காற்றூட்ட வேண்டியதில்லை

46. நிறைவுடலி மட்டும் தாக்கத்தை ஏற்படுத்துவது
(1) செவ்விளநீள் மூஞ்சி வண்டு (2)கருவண்டு 3)தென்னைமயிர்கொட்டி
(4) கபில நிறத்தாவரத்தத்தி (5) தென்னைச் சுரங்கமறுப்பான்

47 உயிரியல்முறை மூலம் கட்டுப்படுத்தக்கூடியது
(1) செவ்விளநீள் மூஞ்சி வண்டு (2)கருவண்டு (3) தென்னைமயிர்கொட்டி
(4) கபில நிறதாவரத்தத்தி (5)தென்னை இலைகோதி

48. செவ்விள நிள்மூஞ்சி வண்டு (Red weevil) பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?
(1) அழுகும் குப்பைகளில் முட்டையிடும்
(2) வளர்ப்பு முறைகளினால் கட்டுப்படுத்தலாம்
(3) நிறைவுடலி, குடம்பி பாதிப்பை ஏற்படுத்தும்
(4) இதன் குடம்பி கலனிழையங்கள் அரித்துண்ணும்
(5) பயிர்ச்செய்கை துப்பரவாக வைத்திருப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

49. ஒரு கலப்பின் போது $F_2$ சந்ததியில் தோற்றமைப்பின் அவதானித்த மீடிறன் 14 : 30: 20 ஆகும். இவ் மீடிறன் 1 : 2 :1 விகிதத்துடன் இணங்குகின்றனவா எனத்துணிவதற்கு மாணவன் chi வர்க்க சோதனையை நிறைவேற்றினான். அவன் கணித்த chi வர்க்கப் பெறுமானம்
(1) 1.38 (2) 1.43 (3) 0.43 (4) 0.38 (5) 0.4

50. செவ்வன் பரப்பிய குடித்தொகையொன்றின் இடை இரு நியம விலகலுக்கு இடைப்பட்ட பெறுமானமாக அமையக்கூடிய குடித்தொகை சதவீதம் அண்ணளவாக
(1) 5% (2) 32% (3) 68% (4) 95% (5) 99%

*51 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடைகளுள் ஒன்று சரியானவை ஒன்று மேற்பட்டவை சரியான்வை.*

| 1. | 2. | 3. | 4. | 5 |
|---|---|---|---|---|
| *ABD* | *ACD* | *AB* | *CD* | வேறு விடை |
| | | | | |

51. வித்துத் தோற்றமானது பல்லினவித்தியுண்மையுடைய தாவரங்களிலிருந்து கூர்க்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. வித்துத் தோற்றக்கூர்ப்பில் ஏற்பட்ட பிரதான மாற்றம் / மாற்றங்கள் பின்வருவனவற்றுள் எது / எவை?
A. மாவித்திக் கலன் கவசத்தால் சூழப்பட்டமை:
B. மாவித்திகளின் எண்ணிக்கை குறைக்கப்படல்
C. பெண்கலச்சனனி இல்லாது போதல்
D. மாவித்திக்கலனினுள் மாவித்தி நிலைபேறடைதல்
E. சூலகத்தினுள் சூல்வித்துகள் அடைக்கப்படல்

52. பின்வரும் எந்த தக்சோனில் / தக்சோன்களில் பரிசக் கொம்புகள் காணபடுகின்றன?
A. *Mollusca* B.*Coelenterota* C.*Insecta* D.*Chilopoda* E.*Crustaca*

53. மரவுரியொன்றில் பின்வரும் இழையங்களில் எதை / எவற்றைக் காணமுடியும்?
A. துணைமேற்பட்டை B. மையவிழையம் C. துணையுரியம்
D. தக்கை E. துணைக்காழ்

54. மனித சனத்தொகை தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது / எவை?
A. கைத்தொழில் புரட்சி ஆரம்பித்த காலம் முதல் சனத்தொகையில் பெருக்க வீதம் வேகமாக அதிகரித்தது.
B. சனத்தொகை இரட்டிப்புக்கால இடைவெளி குறைந்து செல்லுகின்றது.
C. அதிக குடித்தொகையில் உள்ளவர்களின் ஆயுட்காலம் நீடித்திருந்தது.
D. வேட்டையாடும்போது இனப்பெருக்க வீதம் உயர்வாக இருந்தது.
E. உலகின் தெற்குப் பகுதியிலேயே சனத்தொகை அதிகரிப்பு காணப்படுகிறது.

55 டார்வினின் இயற்கைத் தேர்வுக் கூட்டுக் கொள்கையில் காணப்படாத கூற்று / கூற்றுக்கள்
A. வாழ்க்கைப் போராட்டம் B. மாறல் C. மிகையான உற்பத்தி
D. பயன்படுத்தலும் பயன்படாமையும் E. தேவை பற்றிய கொள்கை

56 பின்வருவனவற்றுள் எது / எவை பரிவு நரம்புத்தொகுதியின் விளைவுகாட்டல் ஆகும்?
A. புன்னாடிகளின் சுருக்கம் B. குடல் அசைவுகளைத் துரிதப்படுத்தல்
C. வியர்வை சுரத்தல் அதிகரித்தல் D. அதிரினலின் சுரத்தல்
E. கண்ணீர் சுரத்தல் அதிகரித்தல்

57 கிருமியழித்தல் முறையில் பின்வருவனவற்றுள் எது / எவை பிழையானவை?
A. உலர் வெப்பமுறைமூலம் - வளர்ப்பீடகங்கள் கிருமியழிக்கப்படும்.
B. ஈர வெப்பமுறைமூலம் - கண்ணாடிஉபகரணங்கள் கிருமியழிக்கப்படும்.
C. மென்சவ்வு வடித்தல் மூலம் - குருதி கிருமியழிக்கப்படும்
D. UV கதிர் வீச்சுமூலம் - சத்திர சிகிச்சைக் கூடம் கிருமியழிக்கப்படும்.
E. பாச்சாராக்கம் மூலம் - மதுசாரங்கள் கிருமியழிக்கப்படும்

58 என்புருக்கி நோய் ஏற்படக்கூடிய நிலமைகள்
A. Vita A குறைபாடு B. Vit B குறைபாடு C. Vit D குறைபாடு
D. $Ca^{++}$ குறைபாடு E. $Na^{\cdot}$ குறைபாடு

59. கீழே கொடுக்கப்பட்ட ஒட்டுண்ணிகளில் எது / எவை அழுக்கடைந்த உணவின் ஊடாக ஊடுகடத்தப்படுகின்றது
A. *Plazmodium vivax* B. *Necator americanus*
C. *Entamoeba histolytica* D .*Ascaris lumbricoides*
E. *Entamoeba histolitica*

60. பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானவை?
A. புதிய இனங்கள் தோன்றுவதற்கு இன அழிவு அவசியம்.
B. இரைகெக உளவுதல் உயிர்பல்வகைமையில் அதிக பாதிப்பை உண்டாக்கும்.
C. உலகில் முதல் அழிவு Devonian Period இல் நிகழ்ந்தது.
D. இனமாகுதல் வீதம் இன் அழிவு வீதத்தை விட உயர்வுவானது
E. இன அழிவு ஒரு செயற்கையான செயல்முறை மட்டும்

(உயிரியல் பகுதி II 30.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகும். கடந்த வியாழக்கிழமை வெளியாகிய யாழ். R. குமரனின் பௌதிகவியல் வினாத்தாளில் அமைப்புக் கட்டுரை வருகின்ற வியாழக்கிழமை வெளிவரும்.)